# " INDIA'S PRAYER. "

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE".




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

**"New Series"** ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**


புத்தகம். 25.] பிங்கள௵ தை௴, 1918௵ ஜனவரி௴. [சஞ்சிகை. 10.


## Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit (arrears rate)* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol., *nor without three months' clear notice as required.*†
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

## General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period ;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI."
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.* ☜

†Notice of discontinuance to have effect must be given in writing *full three months before the current Volume ends (in March)* and *after* all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "INDIA'S PRAYER"

### SIR RABINDRANATH'S ODE.

The following "India's Prayer," composed and read by Sir Rabindranath Tagore, was very effective and was appreciated by all :—

Thou hast given us to live.
Let us uphold this honour with all our strength and will.
For Thy glory rests upon the glory that we are.
Therefore in Thy name we oppose the power that would plant its banner upon our soul.
Let us know that Thy light grows dim in the heart that bears its insult of bondage,
That the life, when it becomes feeble, timidly yields Thy Throne to untruth,
For weakness is the traitor who betrays our soul.
Let this be our prayer to Thee—
Give us power to resist pleasure where it enslaves us,
To lift our sorrow up to Thee as the summer holds its midday sun,
Make us strong that our worship may flower in love and bear fruit in krow.
Make us strong that we may not insult the weak and the fallen,
That we may hold our love high where all things around us are wooing the dust.
They fight and kill for self-love, giving it Thy name,
They fight for hunger that thrives on brothers' flesh,
They fight against Thy anger and die.
But let us stand firm and suffer with strength.
For the true, for the good, for the eternal in Man,
For Thy Kingdom which is the union of hearts,
For the freedom which is of the Soul.
Our voyage is begun, Captain,
We bow too Thee,
The storm howls and the waves are wicked and wild,
But we sail on.
The menace of danger waits in the way.
To yield to Thee its offerings of pain,
And a voice in the heart of the tempest cries,
Come to conquer fear!
Let us not linger to look back for the laggards,
Or benumb the quickening hours with dread and doubt.
For Thy time is our time and Thy burden is our own, and life and death are but Thy breath playing upon the eternal sea of life.
Let us not wear our hearts away in picking small help and taking slow count of friends,
Let us know more than all else, that Thou art with us and we are Thine for ever.—(*By wire.*)

---

## முக்கிய அறிக்கை.

இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான நல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக் கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்பட உழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட நெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெரிவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க எற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கியனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள். மானேஜர்.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. "When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* "Terms.")

*Address*:—THE MANAGING AGENTS,
*Vivekachintamani*, 19, *Adam Street*,
*Mylapore*, *Madras*, *S.*

'No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-10.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள ௵ தை ௴.

# விவேக சிந்தாமணி

January 1918.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மேனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## "INDIA'S PRAYER."

*(By Sir Rabindranath Tagore.)*

## "இந்தியாவின் பிரார்த்தனை."

[ஆசியாவின் கவிசக்ரவர்த்தியாகிய ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் இந்தியாதேசத்தாரின் ஸ்வபாவம் விளங்க "இந்தியாவின் பிரார்த்தனை" யென்று இங்கிலீஷில் வரகவியொன்றுபாடி அதைச்சென்ற டிஸம்பர்௴ கல்கத்தாவிற்கூடிய 32-வது காங்ரெஸ் மஹாசபைமுன் வாசித்தார். அதை அங்கு கூடியிருந்த எல்லோரும் மிகவும் மேலாகக் கொண்டாடி இந்தியாவின் அத்யாத்மபாவத்தை நன்றாக விளக்குவதாக அங்கீகரித்ததாலும், அவருடைய கவிகள் மகாகனம்பொருந்திய மிஸ்டர் இ. எஸ். மான்டேகு அவர்களாலும் மற்ற ஐரோப்பிய நிபுணர்களாலும் மிகவும் மதித்து கொண்டாடப்பட்டு வருகின்றமையாலும், அதன் கருத்தை பிரார்த்தனைபத்தாகத் தமிழ்ப்படுத்திக் கீழே பிரசுரிக்கிறோம். அதை வாசித்து அதன் உட்கருத்தை கிரகித்து எல்லாரும் மகிழவும், உண்மையாளர்கள் அந்தப்படி நடக்கவும் அது பரமசாதனமா யிருக்குமென்று நம்புகிறோம். ஒரு தேசத்தாரின் அல்லது ஜாதியாரின் அந்தர்பாவத்தை விளக்குவதொன்றெதுவானாலும் அது நன்மையே பயக்குமென்பதிற் சந்தேகமில்லை. "யத்பாவம் தத்பவதி" அல்லது "மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்பது வியஷ்டியிற்போல் சமஷ்டியிலும் உண்மையே யாகும்.]

---

### பிரார்த்தனைப் பத்து.

I

வாழ்க வென்று வாழ்த்தி யெங்கட்கு
 வாழ்வுதந் தருளினை
வாழ்கவே நாங்களும் வாழ்வை யோம்புவம்
 தாழ்வுவா ராமலே
வாழ்வின் மஹிமைதா னெப்படியப்படி யுன்றன்
 மஹிமையு மாதலால்
வாழ்விற் றாழ்வு வரச்செயு மெதையுமுன்
 னருளினாற் றகைப்போமே !

II

நின்னருள் பெறவன்றி வேறொரு பொருள்பற்றி
 யுள்ளம்பணி யவகேடு
நின்னருள் பெறவறி யாதழியு மென்றறிந்
 துனையே பணிகுவாம் !
நின்னருட் பணியின்றி வேறொன்று பற்றியே
 யுள்வலிகுறை வுறினுடனே
நின்னருட் பேறிலாப் பொய்மை வந்தணுகியெம்
 முயிரையே வௌவுமால்—

III

எம்முள நிறைந் துனைப் பிரார்த்தனை செய்வமிவ்
 வரந்தர நினைப்போற்றியே ;—

எம்முளங் கவர்காம வின்பநுக ராசையை
யெதிர்த்துத்தகைக்க வலியருளுவாய்!
எம்முளஞ்சோர்வுறச்செய்துன்ப முன்னருள்வெளி
தூக்கியே நீக்கியருள்வாய்! [சாயத்
எம்முள முன்னருள் வலியினு லுன்னன்பி
லீடுபட்டுன்பணி செய்கவே!

IV

பின்னுமுள மற்றெலாம் போராடி யழிவுற்று
மண்ணுக்கிறை யாகையிலும்
துன்னுமுன் னருளேயே நம்பிவள ருயரன்பி
லீடுபட்டிருந் துய்யுவாம்!
பின்னுமுள பேர்களுன் பேர்சொல்லிப் பாதித்துச்
சுயநயஞ் சாதித்தழிவரால்
மன்னுமொரு பசிகாரணங்கொண்டு மன்னுயிர் வ
யுன்கோபத் தீதஹிக்குமால்— [தைப்போரை

V

உறுதிவீல தானறிந் துண்மைவலி மிக்கோரராய்
வருவன வருகவென்
றுறுதிகொண் டுண்மைக்கு நன்மைக்கு நயமுடன்
னித்தியமாந் தன்மைக்கு
மிறுதிவரை யிசைந்துவின் றுளமொன்றி வருமுன்
ஸாம்ராஜ்ய சித்திபெறவும் [றன்
அறுதியி லாத்மசுக மளிக்குமொரு ஸ்வதந்திரப்
பேறுபெற வேண்டினோமாய்,—

VI

கதிபெற வினைத்துஜக யாத்திரை துவக்கினேம்
தலைவநீ சரணமென்றே
விதிவலி புயலெனக் கிளம்பியச் சுறுத்தவும்
தீயணவே செய்யும்அலே
கதிசேர வொட்டாது போல்மோதி யார்ப்பரிக்கவு
மிளைக்காது சளைக்காது
மதிவலியோ டுனதுவலி பெரிதெனவே கதிபெற
வலித்தோட்டி வழியே'கிறோம். [யாம்

VII

வழியிலே யாபத்து வலிபெற்று ளதெனுமச்சம்
மிச்சமாய் நின்றெமை
வழிமறித்துக் கொண்டதன் வருத்தத்தைக் கொடு
காத்துக்கொண் டிருக்கு'தையே! [க்கவே
பழிவாங்கு புயல்மத்தி தனிலுறை சத்தம்வாய்
கொண்டுரை பேசுமாபோல்
இழிவின்றி யேயச்சந் தவிர்ப்பான்போ லபயக்குரல்
டெமைமுந்த வழைக்கையிலே, [கொண்

VIII

உடனுற்று வாராமல் தயங்கித் தவிப்போர்க்குத்
தரணியில்நாம் தங்கிநிற்கலாமோ!
உடனுற்ற காலத்தை யச்சம்லஜ்ஜை பற்றவிட்டுநா
மவமே கழிக்கலாமோ!
திடனுற்றுத் தெய்வசங் கல்பமே நாங்கொண்ட
சங்கல்ப மெனத்தேறியே
உடனுற்ற தலைப்பாரம் தெய்வசங் கல்பத்தா
லுன்பார மெனவகித்தே—

IX

இறப்பது மிருப்பது முன்னருள் வெளியிலல்லால்
வேறிலையென் றுறுதிகொண்டு
துறப்பது வெறுப்பது முன்னருள் வெளிகண்டார்க்
கிலையென மனந்தேறியே
மறப்புட னினைப்புக்காளாஞ்சிற்றுயிர் பற்றிநிற்பார்
சீரபெறச் செய்நயநாடலின்றிச்
சிறப்பது தானில்லாத் தன்மைபூண் டொழுகுவார்
நயபயம் நாடாமலே—

X

"அன்றே யென்றன் ஆவியும் பொருளு
முடைமை யெல்லாமுங்
"குன்றே யனையாய்! எனையாட் கொண்ட
போதே கொண்டிலையோ!
"இன்றோ ரிடையூ றெனக்குண்டோ!" வென்றூர்
வழிபற்றி யாம்நடப்போம்!
"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நாமோவிதற்கு நாயகமே!"

ஓம் தத்ஸத்.

## ARUDRA DARISANAM.

## ஆருத்ரா தரிசனம்.

மாதங்களிலெல்லாம் ஸர்வோத்கிருஷ்டமான மார்கழிமாதம் பகவானுக்குப் பிரீதியான மாதமென்றும் அந்த மாதத்திலேயே அவர் தம் பக்தர்களுக்கு கடாக்ஷவீக்ஷணமளித்து அவர்களைக் கரையேற்றக் கிருபை கூர்ந்த மாதமென்றும், அந்த மாதத்தில் எவனொருவன் பகவானை சுத்த ஹிருதயத்தோடு பஜிக்கிறானோ அவன் அதிசீக்கிரத்தில் ஆத்மதரிசன பாக்கியம் பெறுகிறானென்றும் பெரியோர் சொல்லியுள்ளார். ஆருத்ரா தரிசன மஹோற்சவம் இந்த உண்மையையே ஐதிகமாகக் கோயில்களில் திருவிழாவாகக் கொண்டாடப் படுவதன்றி வேறல்ல. இது சிதம்பரத்தில் மிகசிலாக்கியமாகக் கொண்டாடப் படுகிறது. நடராஜமூர்த்தி தேரை விட்டிறங்கி, ராஜசபையில் ஆடம்பரமாய்க் கொலுவிருந்து அதை விட்டுப் புறப்பட்டு நடனம் செய்துகொண்டு கனகசபைக்குள் பிரவேசிக்கத் திரும்புகையில் அவர் தரிசன சேவையே ஆருத்ராதரிசனமாம். இது ஐதிக முறை. ஆத்மார்த்தமாகப் பார்க்கில் பிரபஞ்சத்தில் பாசபெந்தங்களால் கட்டப் பட்டுழன்ற ஜீவன், சற்குருவையடைந்து அவர் கடாக்ஷவீக்ஷணம் பெற்று அந்த பாக்யத்தில் திரிபுரமாகிய தேகத்திரியங்களையும் அதற்கொப்பான திரிகுணங்களையும் எரித்து, அதாவது அறநீக்கி, ஸ்வயம்பிரகாசமாயுள்ள பிரத்யகாத்மன் தானே தானாய்த், தன்மயமாய்த், தனித்திருந்து, நிர்மலனாய், நிராலம்பனாய், நிர்விகாரியாய், 'நெற்றிக்கண்' என்று சொல்லும் 'பிரக்ஞானசட்சு'ப் பெற்றவனாய், அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் காட்டிய 'விசுவரூபதரிசனம்' போல் இந்த அண்டபிண்ட சராசரங்கள் அனைவற்றையும் தன்னுளொடுக்கி யிருக்கும் பகவானை அவரது உண்மை விளங்க உள்ளபடி பார்க்கப்பெற்று ஐயந்திரிபற அவர் மகிமையை உள்ளபடி உண்ணோக்கி யறிவதாம் 'ஆத்மதரிசனம்' என்னும் தத்ஸ்வரூபதரிசனமே ஆருத்ராதரிசனமாம். திருவாதிரையன்று பரமசிவன் தூயஹிருதயமுள்ள பக்தர்கள் ஒவ்வொருவர் ஹிருதயத்திலும் பிறந்து 'புனர்ஜன்மம்' என்று சொல்லும் பெறலரும் பெரும்பாக்கியத்தை யவர்களுக்கு அளிக்கிறார். "Unless you be born again, you cannot enter the Kingdom of Heaven" என்று யேசுகிறிஸ்து இந்த உண்மையையே யெடுத்துச் சொல்லியிருக்கிறார். செத்துப் பிழைத்தாலன்றி சாவுக்குத் தப்புவதில்லை. இந்த 'செத்துப் பிழைத்த'லாம் 'சூக்ஷ்ம அனுபவத்தையே 'புனர்ஜன்மம்' என்றும், 'பிராம்மணத்துவம்' என்றும், 'Re-birth,' 'Resurrection,' 'Birth of the Christ child,' 'Conversion' என்றும் பலவிதமாகச் சொல்லிக் கொண்டாடுகிறார்கள்.

தென்னிந்தியாவில் 'திருவாதிரைக்களி' யென்று களிகிண்டி பகவானுக்கு நைவேத்யம் செய்து, பிரசாதமாக அதைப் புசிப்பது வழக்கமாய் நடந்துவருகிறது. இதன் ஐதிகம் என்னவென்றால்: மார்கழிமாசக்குளிரில் ஒரு ஏழைப் பிச்சைக்காரன் குளிரில் விறைக்கக் களிகிண்டி அதைத்தான் உண்ணுமுன் பரனுக்கு ஒரு கவளமாவது அளித்து மிஞ்சியதையே உண்கிறதென்னும் நியமம் பூண்டவனாதலால் அந்தக் களியையளிக்க யாரும் அகப்படாமல் அதைத் தானும் புசிக்கக்கூடாமல், 'சோவென்று கொட்டும் இந்த அடைமழையில் நான் யாரை யழைப்பேன், அழைத்தாலும் இந்தக் களியைப் புசிக்கயார்வருவார்க' ளென்று மனம்புழுங்கி உள்ளமுருக, உடம்பெலாம் வியர்க்க, அந்த அடைமழைக் குளிரில் அழுதுகொண்டிருந்தான்.

"ஈசனறியுமிராப் பகலுந்தன்னைப்
பாசத்துள்வைத்துப் பரிசுசெய்வார்களை"

என்றபடி, பரமசிவன் இந்த ஏழைநெஞ்சன் உள்ளங்குழைந்துருகுவதைக் கண்டு அவன் அவஸ்தை பொறுக்காதவராக ஒரு பரதேசியைப்போல் வேஷம் போட்டுவந்து அவன் கொடுத்த களியை வாங்கிப்புசித்து அதனால் அவனுக்குத் தமது ஒப்புயர்வற்ற

வரப்பிரசாதமளித்துச் சென்றாரென்பது ஐதிகம். இந்த ஐதிகத்தை .யனுசரித்தே இன்றைக்கும் 'திருவாதிரை நாளில் எவ்வளவு பணக்காரர்களும் ஏழைக்கெளியவனான பரமேசுவரன் ஸ்வபாவத்தையறிந்து 'களி' கிண்டி நைவேத்யம் செய்து அதை ஈசுவரப் பிரசாதமாகப் புசிக்கிறார்கள். இப்படி ஏழைக்கிரங்கியாகிய ஈசன், தாருகாவனத்திலுள்ள இருஷிகள் தாங்கள் தபசு, யக்ஞங்களில் சிறந்தவர்களென்றும் தங்களுக்குமிஞ்சி யொருவருமில்லை யென்றும் உள்ளே கருவித்து நிற்க, அவர்கள் உள்நிலையையுணர்ந்த ஈசுவரன் பிக்ஷாடன மூர்த்தியாக வேஷம் போட்டுக்கொண்டு, விஷ்ணுவம்சத்தை மோஹினிரூபமாக்கி, அத்தவவேடர் சிரைக்குலைத்து அவர்கள் கர்வத்தையெல்லாம் அடக்கியாண்டார். தேவர்களுமிப்படி கருவிக்க அவர்கள் உதவியெல்லாம் பயன்படாமற்செய்து, பக்கத்திலிருந்த உமைபவளைப் பார்த்து அவள் புன்சிரிப்பு மாத்திரத்தால் உண்டான தீயினால் திரிபுரசம்ஹாரம்செய்து தாம் ஏறியிருந்த தேரைவிட்டிறங்கி திரிபுர தகன நீற்றுச் சாம்பலில் ஆனந்த நிர்த்தனம் செய்துகொண்டு பக்தர்களைப் பரிபாலிக்க ஒற்றைக்கால் தூக்கி அம்பலத்தாடி பொன்னம்பலம் சேர்ந்து அசைவற்று ஆடி அமர்ந்தார். இதை முன்னம் பிரசுரித்த ஆருத்ராதரிசனச் சஞ்சிகையில்:—

"மார்கழிமாசந்திருவாதிரையும்
வரலாயிற்றையே
கார்குழலாள்மோகினியும்காரணப்பே
யாண்டியுமே கரைந்தவுருமாறிநின்று
பாரிலுள்ளபக்தர்கள்பரிபக்குவர்
பலருமுய்யப் பரங்கருணைமிகுதியாலே
திரிபுரமெரித்த தேஜோமயானந்தனைத்
தாள்கொடுத்தாள்வன், தரிசிக்கவாரீர், வாரீ
[ரே."

யென்னும் வாக்கில் இதனுண்மையை யுள்ளபடியுணர்த்தி யிருக்கிறது.

அவதார புருஷர்களில் ஒருவராகிய யேசுகிறிஸ்துவும் அவர் தம் சிஷ்யர்களுக்கு மலையுச்சியில் செய்த உத்தம உபதேசத்தில் "Blessed are the poor in spirit: for their's is the Kingdom of Heaven" என்று துவக்கி முழுக்ஷுலக்ஷணங்களை வெகு நன்றாகச் சொல்லிக்காட்டியிருக்கிறார். அவர் உபதேசப்படி மோக்ஷகைவல்யத்துக்குப் பாத்திரமானோர் குணங்கள் பின்வருவனமாம்:—

(1) 'The poor in spirit'—(உலகப்பற்றற்ற) ஏழைபரதேசிகள் *cf.* 'ஏழைக்கெளியன்.'

(2) 'They that mourn'—துன்புற்றார், *cf.* "தொழுதகை துன்பந்துடைப்பாய். போற்றி"

"அளிபவர் உள்ளத்தமுதே போற்றி."—
திருவாசகம்.

(3) 'The meek'—பொறுமை, அடக்கம் உடையோர். *cf.* 'பொறுத்தார் பூமியாள்வார்.' 'தானடங்க ஊரடங்கும்' 'அடக்கமுடையார் ஆக்கமுடையார்.'

(4) 'They which do hunger & thirst after righteousness'—*cf.* 'தன்னைத்தானறியத் தபித்தவர்கள் தான் குடிப்பார்.' 'தபித்துக்குடித்தார்க்குத் தாகமது அற்றுப்போம்'—ஆனந்தத்தாய்மொழி.

(5) 'The merciful'—கருணையுள்ளார்—*cf.* 'உள்ளங்கனிந்தாரை யுள்ளபடி போற்றுவாயே,—ஆனந்தத்தாய்மொழி.

(6) 'The pure in heart'—அகத்தூய்மையுள்ளார். *cf.* 'அத்தனருள்வேண்டில் அகந்தூயவேண்டும்.'—ஆனந்தத்தாய்மொழி.

(7) 'The peacemakers'—சாந்த ஸ்வரூபிகளான ஸாத்விகர்.

(8) 'They which are persecuted for righteousness' sake'—'சத்யத்துக்காகத் துன்பப் படுத்தப்படுவோர்' *cf.* பிரகலாதன், அரிச்சந்திரன்.

இப்படி அவர் சொல்லும் ஒவ்வொரு குணத்துக்கும் நம் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் ஐதிகபாவமான கதைகள் அனேகமிருக்கின்றன. இக்கதைகளின் உட்கருத்தையுணரமாட்டாதவர்கள் இவைகளை யிகழ்ந்து பேசுவார்கள். உண்மையறியவல்லோர் இவைகளையியற்றிய பெரியோர்களின் சூக்ஷ்மபுத்தியைக்கண்டு வியப்பார்கள். இப்படியாக ஸத்யம் ஒன்றாகவிருக்க, அதைக் காலதேச வர்த்தமானங்களுக்கிசையவும் அவரவர் மனோ நிலைக்கேற்கவும் இசைத்துச் சொல்லப்புகும்போது பலபல விதமாகத் தோற்றுகின்றது. ஆனால் இந்த வித்யாசமெல்லாம் தோற்றமாத்திரமேயன்றி உள்ளாய்ந்து பார்த்தால் எல்லாம் ஒரே தத்வத்தை விளக்குவதாயிருக்கும்.

## THE TRUE BASIS OF MORALS.

### "சத்தியமின்றி சன்மார்க்கமில்லை."

"சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை." சத்தியம்—அழியாதது; எப்பொழுதும் உள்ளது: மாறாதது: எல்லையற்றது: இரண்டற்றது. இவை சத்தியத்தின் ஸ்வபாவங்களாம். இந்தப் பஞ்சலக்ஷணங்களு மமைந்துள்ளதெதுவோ அதுவே சத்தியமாம். இவ்வைந்தில் ஒன்று குறைபினும் மற்றவை பொருந்தாதொழியும். அழியாத்தன்மையில்லாவிடத்து மற்ற நாலும் பொருந்தியிருத்தல் கூடாமை. அழியும்வஸ்து எப்பொழுதும் உள்ளதாகாது; மாறாத் தன்மையதற்கில்லை; எல்லையற்றதென்று அதைச் சொல்லுவதற்கில்லை; இரண்டற்றதென்றும் சொல்லக்கூடாது: ஏனெனில் எப்பொழுது அழிவுண்டோ அப்பொழுதே அதற்கு உற்பத்தியுமுண்டு என்று ஏற்படுகிறது. இப்படியே நித்யத்துவமும் மற்றவையுமில்லையாம்; மற்றவையுமிப்படியே. சன்மார்க்கம்—அழியாதமார்க்கம்: நன்மார்க்கம்; நன்னடத்தை. உலகத்தார் நன்னடத்தை யவசியமென்று கொண்டாடுகிறார்கள். ஆனால் நன்னடத்தை போதிக்கும் வழியென்னவென்று விசாரிக்குமிடத்துத் தடுமாறித் தத்தளிக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு ஜனசமூகத்தாரும் அவரவர்கள் பொதுக்ஷேமத்துக் கேற்றதென்று அவர்களில் மேலோர் மதிப்பதை ஓர் தர்மநூலாகக்கொண்டு வழிபடுகிறார்கள். ஹிந்துக்களுக்கு மனுதர்மசாஸ்திரம், பராசரஸ்மிருதி முதலிய நூல்கள் தர்மவிதியுரைக்கும் நூல்களாகின்றன. யூதர்களுக்கு மோசே யென்பவரும் மற்ற தீர்க்கதரிசிகளும் குறிப்பிட்டுவைத்தவிதிகள் நன்னடத்தைக்குரிய நல்வழிகாட்டும் தர்மசாஸ்திரங்களாகின்றன. தற்காலத்தில் புத்திவன்மையால் பிரகிருதி விதிகளாம் தத்துவங்கள் பலவற்றைக் கண்டுபிடித்த மேற்றிசை நாகரிகர்களான ஐரோப்பியர்கள் முதலானோர் சென்ற இருநூற்றாண்டுகளில் தலைப்பட்டு விளங்கிய தத்துவசாஸ்திரிகளியற்றிய சன்மார்க்க நூல்களைப் பூர்வீக தர்மசாஸ்திரங்களுக்குச் சமானமாக மதிப்பவர்களாக விருக்கிறார்கள். ஆதியில் மதக்குரவர்களாயிருந்து தர்மசாஸ்திரங்களேற்படுத்தினவர்கள் தீர்க்கதரிசிகளாக விளங்கினரென்பது பிரசித்தம். அப்படியே இக்காலத்து மேற்றிசைத் தத்துவசாஸ்திரிகள் தங்களுடைய புத்திவன்மையால் ஆராய்ந்து கண்டுகொண்ட அளவே உண்மையென்றும், மனிதன் தன் புத்திவன்மையால் பிரகிருதி தத்துவங்களை யறியக்கூடியது இவ்வளவேயென்றும் வரையறுத்து; இதற்குமேல் பூர்வத்தில் தீர்க்கதரிசிகள் கண்டதாகச் சொல்வதெல்லாம் ஜனங்களை மயக்கிக் கட்டுப்படுத்துவதற்காகச் செய்த சூழ்ச்சியேயன்றி அதில் உண்மை யெவ்வளவு மில்லையென்பது தங்கள் சித்தாந்தமாக ஸ்தாபித்து; அதைப் பரவச் செய்யுமாறு வேதங்களில் தீர்க்கதரிசிகளும், கிறிஸ்து, ஸ்ரீகிருஷ்ணன் முதலான தெய்வத்தன்மை வாய்ந்தவர்களும் சொல்லியவற்றில் அவர்கள் புத்திக்குச்சரியென்று பட்ட அளவுக்கு அங்கீகரித்து மற்றவற்றை நிராகரித்துத் தள்ளி; மதாசார அனுஷ்டானங்களாகப் பண்டைக்காலமுதலேற்பட்டு வழங்கிவந்தவைகளைக் கண்மூடித் தனமாயனுசரிப்பது மனுஷனுடைய புத்திக்கும் சத்திக்கும் குறைவுண்டு பண்ணுவதாயும் அவனுடைய பெருமையையும் சுதந்தரத்தையும் குறைப்பதாயும் சொல்லிப், பிரபல புத்தகங்கள் எழுதி அவர்களது புதுமையான எண்ணங்களைப் பரவச்செய்து வந்தார்கள்.

இவர்கள் முயற்சி பலிக்கவும், இக்காலத்தில் பள்ளிப்பிள்ளைகளும் "தெய்வமுமில்லை ஒன்றுமில்லை; தெய்வமுண்டானால் அதைக் கண்டவர் யார்? முக்காலத்தில் தெய்வத்தை நேர்நேராகக் கண்டதாகச்சொல்லிய ஞானிகளெல்லாம் தலைதடுமாறிப் பிதற்றியபேதைகள். இக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பூதபௌதிக சாஸ்திரங்களின் உண்மை அவர்களுக்குத் தெ

ரியா"—என்று வாய்மதம் பேசி தெய்வத்தை யிகழ்ந்து உண்டுடுத் துறங்குவதும், இத்தேக முள்ளமட்டும் புலன்பொறி வழிகளால் அனுப விக்கத்தக்க சுகமனைத்தையு மனுபவித்து ஆசைதீர்ப்பதுமே கருமமொழிய வேறு தே டத்தக்க தொன்றுமில்லையென்று வம்பு தும்பு பேசி வாதாடிப் பெரியோரை மதிக்காமல் சத் தியத்துக்குக் கட்டுப்படாமல் "கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்" என்று காலங் தள்ளுகிறார்கள். இவ்வகையார் இங்கிலீஷ் படிப்பு விருத்தியாக ஆக அதிகரித்தார்கள். இதனால் பொதுவில் ஜனசமூகத்துக்கு விளை யுங்கேடு எல்லாருக்கும் நன்றாக புலப்படலா யிற்று. கவர்னர்களும், கவர்னர் - ஜெனரல் களும், இங்கிலீஷ் படித்தவர்களிடத்தில் இக் குறைகளைக்கண்டு இதற்குக் காரணம் காணத் தேடினார்கள். ஆங்கிலேய உத்யோகஸ்தர் களும் பத்திராசிரியர்களும் முதலில், ஹிந்துக் களுடைய சுபாவமே கெட்டது: அவர்களைப் படிப்பிப்பதினால் அவர்களுடைய கெட்ட சுபா வங்களே தலையெடுத்து விளங்குகின்றன: இது ஜாதிசுபாவம், எளிதில் நீங்காத்தன்மை யது: இவர்களுக்கு அதிகமாய்ப் படிப்புப் போதித்தல் கூடாதென்று முறையிட்டுக் கூறி னார்கள். பிறகு இது வீண் அபவாதமென்று கண்டு போதனமுறையில் குற்றமிருக்கலா மென்று நினைத்து அதைச் சீர்திருத்தவேண்டு மென்று முயற்சித்தார்கள். பள்ளிப்பிள்ளை களுக்குச் சன்மார்க்க விர்த்தியுண்டாக நீதி சாஸ்திரங்களும், நன்னெறி போதிக்கும் கட் டுரைகள், மூதுரைகள், நீதிக்கதைகள் முத லியவும் போதிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானம்செய்து அந்தப் படியே நடந்துவர உத்தரவும் பிறப்பித்தார் கள். சீக்கிரத்தில்தானே இது பிரயோசனப் படாதென்று கண்டு கொண்டார்கள்.

பள்ளிப்பிள்ளைகளுக்குச் சன்மார்க்கபோதம் செய்பவேண்டிய தவசியமென்பது எல்லா ராலும் ஒப்புக்கொள்ளபட்டும், சன்மார்க்க போதமில்லாக்குறை பெருங்குறையென்று எல்லாரும் குறைகூறி முறையிட்டும், அக் குறையை நிவர்த்திக்க வழியறியாது திகைத்து வார்த்தை மட்டோடு விட்டுவருகிறார்கள். இது விஷயமாய் நாம் எழுதிய ஒரு பிரபந் தத்தில்* சன்மார்க்கத்துக்கு ஆதாரமாயுள்ளது தெய்வஞானமென்றும், ஆகையால் அந்த ஞானத்துக்கு ஏதுவான மதபோதனை எல்லா மதத்துக்கும் பொதுவாகவுள்ள உண்மை களைக்கொண்டு எல்லா பள்ளிக்கூடங்களிலும் பால்யவயது முதல் போதிக்கப்படவேண்டு மென்றும் வற்புறுத்திக்கூறினோம்.

இதுநிற்க, சன்மார்க்கம் சன்மார்க்கமெ ன்று எல்லாரும் சன்மார்க்கத்தை விரும்பிப் பேசுகிறார்கள். புறக்காரணங்களை முன்னிட்டு சன்மார்க்கவழியை யனுசரிக்கச்செய்வது ஒரு நூற்றாண்டு முழுவது முழைத்தபின் கூடாத காரியமென் றேற்பட்டுவிட்டது, மற்றோரிடத் தில் "பாலபோதம்" என்னும் தலைப்பின்கீழ் விவரமாய்க் கண்டெழுதியிருப்பதால் விளங் கும். ஆகவே சன்மார்க்கத்தை யனுசரிக்க ஆதாரமான சாதகங்கள் மனிதன் உள்ளத்தி னுள்ளேயே யிருத்தல்வேண்டும். உள்ளத்தை யொட்டியுள்ள காரணங்களேற்படில் மனி தன் தானாகவே யந்தவழியில் நடப்பது சகஜ மாகும். அதற்கு மனிதன் தன்னைப்பற்றிய உண்மையை உள்ளபடி யறியவேண்டும். "தன்னையறிந்தவன் தலைவனாவான்." தன்னை யறிய ஆத்மவித்யா போதமவசியம். ஆத்ம வித்யாபோதமே மதசித்தாந்தங்களின் நோக்க மும் முடிவுமாம். மூடர்கள் கெட்டுப்போகா தபடி முன்னோர் ஸ்வர்க்கநராகானுபவங்களை வர் ணித்தெழுதி வினையின் பயனைவிளக்கியிருந் தார்கள். இப்பொழுது வரவர புத்திவிர்த்தி யதிகமானதால் அந்த சூக்ஷமம் பலிக்கத்தக் கதாயில்லை. ஆகையால் உண்மையை யுள்ள படியெடுத்துப் போதிப்பதே மேலான மார்க்க மாம். உண்மையாவது சத்தியம்.

ஹிருதய சுத்தியும், காருண்யமும், அன்பும் நிறைந்துள்ள சீவனுக்கு அதையறிவது சுலு

* *Vide* the paper on "Religion and Ethics."

வாம். சிந்தையைத்தூய வழியிற் செலுத்திக் கொண்டேபோனல் அது முடிவில் சத்தியத்திற் கொண்டுவிடும். தெய்வமுண்டென்றாலும் சரி, இல்லையென்றாலும் சரி,—தூயநெறிசெல்வார் கடவுளை யடைவார்—சித்தந்தெளியில் சிவனைக்காணலாம்; சத்தியத்தையறியலாம்; அகத்தூய்மையொன்றே முக்கியம். அதுவும் "வாய்மையால் அகம் தூய்மையாம்."—என்றபடி வாய்மை (உண்மை) யால் சித்திக்கத்தக்கதாம்.

கிறிஸ்துவும் "Love is the fulfilment of all laws." "அன்பிலமர்ந்துறைய எல்லா தர்மங்களும் நிறைவெய்தும்" என்றார். "God is love." "அன்பே அவன்" என்றதனாலும், அன்பின்வழியே சத்தியத்தைக் காணலாம், "அல்லது அன்பு பரிபூரணமானவிடத்தே சத்தியம்" என்றதனாலும் எல்லார் போதனையும் ஒன்றேயென்பது ஸ்பஷ்டமா யேற்படுகிறது. ஆகையால் சத்தியத்தில் பற்றில்லையேல் சன்மார்க்கத்திலும் பற்றில்லாதொழியும். சத்தியத்தை நேசித்தார் சன்மார்க்கத்தைத் தாமே நேசிப்பார். அவருக்கு சத்தியநேசம் தவிர வேறு தூண்டுகோல் வேண்டியதில்லை. சத்தியத்திலுள்ள நேசம் சன்மார்க்கத்தை விர்த்தி செய்யும்; சன்மார்க்கவிர்த்தி சத்தியத்தை அதிகமாக நேசிக்கச்செய்யும். இப்படி ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருந்து ஒன்றையொன்று வளரச்செய்யும். ஆகையால் "சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை" யென்பதினுண்மையை யாவராலும் மறுக்கவொண்ணாது. ஆத்மாவின்றித்தேகமில்லை; தேகமென்பது கருவி கரணங்களமைந்த ஒரு ஆயுதம்போலாம்; அதை யுபயோகிப்பவன் ஆத்மா. அவன் அனாதியாயுள்ளவன். பிறப்பிறப்பற்றவன். ஆகையால் தேகமனோதத்துவங்களோடு ஆத்மதத்துவங்களையு மறியவேண்டியதவசியம். கருவி கரணங்களின் விர்த்தியெல்லாம் ஆத்மவிலாசம் வெளிப்பட்டு விளங்குவதற்காகவே. அதை மறந்துவிட்டால் பயிற்றும் வித்தை பயனற்றதாகிறது.

## ON PRIMARY EDUCATION.
## பாலபோதம்.

பொட்டைப் பாடமாக நெட்டுருப்போடும் கெட்டவழக்கத்தைவிட்டு, குழந்தைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்கு வித்தை போதிப்பதிலும் அவர்களுடைய ஆத்மவிலாசம் விளங்கும்படி முறையறிந்து நடந்துக்கொள்ளுவதே உண்மையான போதனுமுறையென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். சென்றமாதச் சஞ்சிகையில் பிரசுரமான "கிண்டர்கார்டன்" போதனாமுறை என்னும் வியாசத்தில், இம்முறையை முதல் முதல் மேற்றிசையில் கண்டு பிடித்தவரான ப்ரடெரிக் ப்ரோபல் அவர்களுடைய உண்மையான சித்தாந்தங்களை உள்ளபடி யெடுத்துரைக்கப் பட்டிருந்தது.

இதுநிற்க, அமெரிக்காவில் வித்யாபோதன விஷயமாய்செய்த முயற்சிகளின் பயனை டாக்டர் ஹிர்ஸ்ச் என்னும் விற்பன்னர் ஒருவர் உள்ளாராய்ந்து உண்மையை வெளியிட்டிருப்பதை சுருங்கச் சொல்லுவோம். அதன் கருத்து என்னவெனில்: 18-ம் நூற்றாண்டில், பூமியில் குற்றங்களும் குறைகளும் மலிந்து நிறைந்து கிடைப்பதற்குப் பரிகாரம் படிப்பு ஒன்றே என்று நம்பினார்கள். வித்தைப்பயிற்சியினால் எல்லாக்குற்றங்களும் குறைகளும் நீங்கிவிடும் என்று அக்காலத்திலுள்ள பிரதம வித்வான்களும் விற்பன்னர்களும் எண்ணினார்கள். ஆகவே அவர்கள் எண்ணம் பரவிப்பலன்படலாயிற்று. 19-ம் நூற்றாண்டில் அவர்களுடைய எண்ணங்களெல்லாம் நிறைவெய்தலாயிற்று. எல்லாரும் எழுதிப்படிக்கக் கற்றால் பூமியிலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கிவிடுமென்று அவர்கள் எண்ணியெண்ணி ஏங்கிய ஏக்கம் 19-ம் நூற்றாண்டின் முடிவில் காரியசித்தியானதினால் நீங்கியது. அமெரிக்கா யுனைடெட்ஸ்ட்டேட்ஸில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் வெகு அபூர்வம். சகலருக்கும் அக்ஷராப்பியாசம் செய்வித்து எழுதப்படிக்கப் போதிக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டது நிறைவேறியது. ஹைஸ்கூல்,

யூனிவர்ஸிடி வித்தைகள் அதாவது பிரதம வித்தையும் மத்ய உயர்தரப்படிப்பும் அதிகமாய்ப் பரவவேண்டுமென்று அவர்கள் கொண்டநோக்கமும் நிறைவேறியது. ஆனல், இவைகளினுலுண்டாகுமென்று அவர்கள் திண்ணமாய் எதிர்பார்த்த சுகிர்தங்கள் மட்டும் உண்டாகவில்லை. பூமியிலுள்ள குற்றங் குறைகளும் குறையவில்லை. புத்தி கூர்மைப் படக் கூர்மைப்பட, பொய், களவு, மோசம் முதலான பாதகஞ்செய்யும் குற்றவாளிகளும் அவர்கள் தொழிலை முன்னிலும் அதிக புத்தி கூர்மையோடு செய்து வந்தார்களேயன்றி அவர்கள் குற்றத்தைவிட்டுச் சீர்திருந்தினரில்லை. ஆகவே 19-வது நூற்றூண்டின் முடிவில் படிப்பினல் மட்டும் மனிதன் சீர்திருந்துவான் என்று எண்ணினது பொய்யென்று ஸ்பஷ்டமாகப்பட்டது. இப்பொழுது நடக்கும் 20-வது நூற்றூண்டில் அமெரிக்காவில் பொது ஜனவித்யாபோதனைப் பொறுப்புள்ளவர்கள் இதுவரையில் நடத்தப்பட்ட வித்யாபோதனமுறையில் உள்ள குற்றத்தைக்கண்டு ஒப்புக்கொண்டு, இந்த நூற்றூண்டு முதல் அக்குற்றத்தை நீக்கி உண்மையான வழியை அனுசரிக்க முயலுகிறூர்கள். 19-வது நூற்றூண்டில் கற்றுக்கொண்ட உண்மை யென்னவெனில், ஆத்மவிர்த்தியைக் கவனிக்காது, மனதையும் புத்தியையும் மட்டும் படிப்பினல் கூர்மைப்படுத்தி வருவதினல் பிரயோசனமில்லை. மனிதன் அதனல் சீர்ப்பட்டு உயர் நிலையடையாமல், முன்னிருந்த நிலையிலேயேயிருந்து முன்செய்த குற்றங்குறைகளை இன்னும் சாமர்த்தியமாகச் செய்துவருகிறுன். ஆகையால் இளங்குழந்தைகளுக்கு வித்யாபோதனை செய்வதில் அவர்களுக்கு விஷய ஞானமுண்டாக்குவதையே பெரிதாக வெண்ணுமல் விஷயானுபவத்தால் அவர்களுடைய ஆத்மவிலாசம் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும் படி செய்யவேண்டு மென்பதேயாம். இதை நமது பூர்வீக ரிஷிகள் வாக்கில் சொன்னல், தெய்வசிந்தையின்றி சுத்தநாஸ்திகப் படிப்பு பொதுவாய் ஜனங்களுக்கு நன்மையைப் பயக்காது என்பதாம். இதை கிண்டர்கார்டன் முறையை யனுசரிப்போர் வாக்குப்பிரகாரம் செப்பின், விஷய ஞானத்தினும் ஸத்வகுண விர்த்தியே விசேஷபயன்தந்து மனிதனை மேலே தூக்கிவிடும் தன்மையதாகும். இந்த உண்மையை தேசப்பொதுவிலனுபவரீதியாயுணர இரண்டு நூற்றூண்டுகள் அல்லது 200-வருஷங்கள் சென்றன. இப்படியே மனிதர்கள் பிரத்தியேகமாகவும் பிழைசெய்ததின் பயனை யனுபவித்து உண்மையை யுணர்கிறூர்கள்; உண்மையை யுணரவும் அவர்கள் வாழ்க்கை யுடனே மாறிவிடுகிறது. இந்த இரு நூறுவருஷ அனுபவத்திற் கண்டவுண்மையையே ஒருவர் ஸ்வானுபவத்திற்கண்டு பின் வரும் மூன்று வரிகளில் அழகாய்த் தீட்டியிருக்கிறூர்:—

"நேற்றுத்திருவருள்வாக்கை நான்நோக்காவிட்டேன்
"பரம்பொருளதனைப்பராக்காய் விட்டான்
"பெற்றேன் பிழைத்தேன் பரம்பொருளை யினித்
தானு மசட்டை செய்வேனே நான்."

அமெரிக்காவில் வித்யாபோதன விஷயத்தில் முதன்மையாயுள்ளவர் எண்ணமும் கொள்கையும் இதற் கொத்ததாகவேயிருக்கிறது.

இன்றைக்கவர்கள் மனேபாவம் என்னவெனில், நேற்று (போனகாலத்தில்) ஆத்மக்ஷேம விர்த்தியைநாடாது தேகமனேவிர்த்தியையே நாடியுழைத்தோம்; அது உத்தேசித்த பலனைக்கொடுக்காது தவறிப்போய்விட்டது: போனது போயிற்று; இனிக்கருவிகரணங்களைக் கொண்டு ஆத்மவிர்த்தியையே முதல் நோக்காக் கொண்டுழைப்போம்: இனி ஆத்மாவை அசட்டை செய்யவொண்ணுது. நாம் ஆத்ம விர்த்தியென்று சொல்வதை அவர்கள் "Character building" என்கிறூர்கள்: இதை ஸத்வகுணவிர்த்தியென்று சொல்லலாம். எப்படிச்சொன்னலென்ன! அனுபவத்தில் எல்லாமொன்றையே குறிக்கிறது.

அமெரிக்காவில் இந்த உண்மையை என்னமாகக் கண்டு பிடித்தார்களென்றால், போலீஸ், ஜெயில் முதலான குற்றவாளிகளைத் திருத்துவதற்கான இலாகாக்கள் என்னமாயுண்டாயினவென்று தீர ஆலோசித்து, காரணத்திலிருந்து காரியமுண்டானது நிச்சயமாதலால், காரியத்திலிருந்து காரணத்தை விசாரித்துக்கண்டு, காரியத்துக்குக் காரணமும், அந்தக் காரணத்தைக் காரியமாக்கி அதற்குக் காரணமுமாக இப்படியே ஒன்றைத் தொட்டொன்றாகத் தொடர்ந்து பிடித்து விசாரித்துச் சென்றார்கள். இப்படி விசாரித்துச் சென்றதில் பாலப்பருவம், வளரும் பருவத்தில் சிறுவர்களுக்குச் சரியானபடி வித்தை போதித்தல், அதாவது அவர்கள் உள்ளம் உண்மையான வழியைப்பற்றிச் செல்லும்படிச் செய்தல்—இதெல்லாம் ஆத்மவிர்த்தியையே காட்டும்—இராஜ்ஜிய க்ஷேமத்துக்கு மிகவும் அவசியமென்று கண்டார்கள். காணவும், உடனே அதை பூர்ஜிதத்துக்குக் கொண்டுவரத் துவக்கினார்கள். இப்படி எண்ணித் துணியும் ஆற்றலும் துணிந்ததைத் தொடுபிடியாய்த் தொட்டுச்செய்யும் சக்தியும் வாய்ந்த அமெரிக்கர்கள் பொதுஜன வித்யா போதன விஷயத்தில் இம்மேலான குணங்களமைந்திருப்பதுபற்றி உலகில் தலைமை வாய்ந்து உண்மை நெறியில் வழிகாட்டிச் செல்லும் சிலாக்கியம் பெற்று விளங்குகிறார்கள். அமெரிக்கா இதரதேசத்தாருக்கு இது விஷயத்தில் போதிக்கும் நீதி யென்னவெனில், வித்யா விஷயத்தில் செய்யப்படும் எல்லா முயற்சியும் ஸத்குண விர்த்திக்கு அனுகூலமாக விருக்கவேண்டியது. * அதாவது வித்யா இலாகா விதிகளுக்குத் தக்கப்படி பிள்ளைகளைப் பழக்காமல், பிள்ளைகளின் ஜீவபாவத்திற்குத் தக்கப்படி அவர்களின் ஆத்மவிலாசம் வெளிப்படுவதற்கு அனுகூலமான விதமாக முறையறிந்து அவர்களைப் பழக்கவேண்டும்.

உயர்தர (கலாசாலைப்) படிப்பைவிட, குழந்தைப் பிராயத்திலும் வளர்பிராயத்திலும் சிறுவர்களை முறையறிந்து பழக்கி அவர்களிடத்துப் பூர்வ வாசனையாலுண்டான குணக்கேடுகளை யறிந்து அவைகளைக் கூடியவரையில் ஆத்ம க்ஷேம விர்த்திக்கனுகூலமான வழியை யனுசரித்துத் திருத்தி அவர்களை சன்மார்க்கத்தில் திருப்புவது இராஜ்ஜியப் பொதுவிற்கு அதிக நன்மைபயக்குவதாயும் அதிகப்பிரயோசனமுள்ளதாயு மிருக்கிற தென்பதை அமெரிக்கர்கள் உண்மையிலுள்ளபடி கண்டு பிடித்தனுசரிக்கத் துவக்கியிருக்கிறார்கள். பாலப்பருவத்தில் சிறுவர்களைச் சீர்திருத்தாது விட்டு அவர்கள் வளர்ந்தபின் அவர்களிடத்துள்ள குணக்கேடுகளைத் திருத்த போலீஸும், மாஜிஸ்திரேட்டும், ஜெயிலும் ஏற்படுத்துவது, முளையில் கையால் கிள்ளக்கூடியதை முதிரவிட்டு அனேக ஆள்களைவிட்டுக் கோடரி கொண்டு தரிப்பதுபோலாகிறது. தரித்தும் பயனென்ன! மரம் விழுந்தாலும் வேருள்ள மட்டும் அது மேலும் மேலும் கிளைத்து முளைத்துக் கொண்டேயிருக்கும். ஆகையால் இளம்பிராயத்தில் சிறுவர்களைத் தேற்றுவது பின்னால் போலீஸும், நியாயஸ்தலங்களும், ஜெயில், கொட்டடிகளும் ஏற்படுத்தி அவர்களால் இராஜ்ஜியத்துக்குத் தீங்கு நேராதபடி காப்பதிலும் மேலான காரியமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதல்லவா! மேற்றிசையில் இந்த உண்மையை யுணர்ந்தவர்களில் முதன்மையானவர் ப்ரெடரிக் ப்ரோபல். இவர் "செத்தபின் சுடுகாடு சென்று சடங்குகள் செய்து ஒருவனைக் கரையேற்றுவதிலும், பிறந்தவுடன் தொட்டிலைபண்டி நின்று அக்குழந்தை தன்னுணர்வுண்டாகி வளர்ந்து தன்மயத்துவம் பெறவுழைப்பது மேல்" என்றுணர்ந்து அவருடைய வாழ்நாள் முழுவதையும்

* "The most essential principle...is that of making other instruction subservient to the training which makes for character in the individual. This means that the child is no longer to be bent to the unyielding code, but that the method is to be adapted to meet the demands of the developing soul."

குழந்தைகளை வளர்க்கும் வழியைக் கண்டுபிடித்து அதன் முறையை விளக்குவதில் கழித்தார். அப்படியே பருவமேறவேற மனிதனாகும் வரையில் அதை யனுசரித்துப் போதிக்கு முறை கண்டுபிடிக்கவேண்டு மென்பது இவர் கருத்து. ஆனால் இவருடைய வாழ்நாள் அதற்குப் போதவில்லை. இவர் அரைகுறையாக விட்டதை நமது ஆரிய ரிஷிகள் இவருக்கு முன்னேயே பூர்த்திசெய்துவைத்திருந்தார்கள். ஆனால் அம்முறைகள் அவர்களுடைய சந்ததியார்களின் ஆண்மைக் குறைவாலும் தாழ்மை நிலையாலும எவ்வளவு பிரசித்தி பெற்று விளங்கவேண்டுமோ அவ்வளவு விளங்கவில்லை. விளங்கவில்லையானாலும் அவை யழிந்துபோகவில்லை. ஏனெனில் அவையென்றைக்குமழியா உண்மைகள். உலகழிந்தாலும் உண்மை அழிவதில்லை. "பூமியும் ஸ்வர்க்கமுமழிந்தாலும் என்சொல்மட்டும் அழியாது."—அதாவது மாறாது என்றார் யேசுகிறிஸ்து. இவர் மனிதனுடைய உண்மையை உள்ளபடி முற்றுமறிந்து போதித்திருந்தும் இவர் போதனை, புத்தி விர்த்தியினால் அகங்காரம் துளிர்த்த மேற்றிசையாருக்கு உள்ளத்திலுறைக்கவில்லை. தேகத்தை யொட்டி மனிதனைப் பாலன், சிறுவன், பெரியவன் என்று வகுத்தல் தகுதியல்ல. உள்ளத்தின் விர்த்திக்குத் தக்கபடியே அவன் மதிக்கப்படவேண்டும். உண்மையான முறைப்படி வளர்க்கப்பட்ட ஒருவன் உள்ளும் புறமும் ஒத்து விளங்குவான். அறிவென்பதே அனுபவம். ஆகையால் உலகானுபவத்துக் காதாரமாகவே யிருக்கவேண்டும் எல்லாப் போதனையும் படிப்பும். பள்ளியிற் போதனை வெளியனுபவத்தை விளங்கச்செய்வதாக விருக்கவேண்டும், விளங்கச்செய்யுமளவுக்கே அது உண்மையான போதனையாகும். குழந்தை பிறந்தால் அது குடும்பத்துக்குள்ளிருந்து வளர்கிறது. அதன் உலகமெல்லாம் அதற்கு குடும்பத்துக்குள்ளாகவே: அப்படி வரையறுத்துச் சுருங்கப்பெற்ற சுற்றுப்புற ஞானத்தால் அதன் ஆத்மபுத்தியும் சுருங்கிப்போகாமல், வெளியுலகத்தை வியந்தறிந்து ஆத்மபுத்தி அகன்று வளர்ந்து உலகானுபவமுற்றி அதையுங்கடந்து "உலகெலாமுணர்ந்தோதற்கரியனான உண்மையனைக்" காணற்கருகனாய் அவனாத்மா வரையற்று விளங்கவேண்டும். இதுதான் உண்மையானவித்தை. இதையடையப்பெறுவதுதான் உயிர்நலம் பயக்கும். இதைக்கொண்டே மனிதன் இகம்பரம் இரண்டிலும் தேறிப்பிழைக்கவேண்டும்—இதை ஆத்மவித்தையென்று சொல்லுவர் நம்மில் மூதறிஞர். குழந்தைகளுக்கு சுபாவமாகவுள்ள ஆத்மபுத்தியும், அவர்களைப் பழக்கும் முறைதப்பாக விருத்தலால் வயதுசெல்லச் செல்ல விர்த்தியாய் பிரகாசிக்காது, ஒடுங்கி மழுங்கி இருந்தவிடம் தெரியாமற் போகிறது. இந்த உண்மையை உள்ளத்தில் வைத்துழைப்பதே உண்மையான வித்யாபோதனா முறையாம்.—இந்த உண்மையை உள்ளபடி கிரகித்தவராதலால் ப்ரோபல் கண்டுப்பிடித்த கிண்டர்கார்டன்முறை வரவரப் பரவிவருகிறது. அவர் முறைக்குயிராயுள்ளது இந்தவுண்மையே. இந்த உண்மையை யறிந்து பற்றினவர் அவர் முறையை யெளிதிலுணர்வார். மற்றவர்கள் என்னதான் ஏட்டுப்படிப்புப் படித்தவர்களானாலும் அவர் முறையை உண்மையிலுணரார் உணராரே.

---

## "கல்விச் சிறப்பு"

வல்லாரே ஆயினும் வாய்ந்தகலை கல்லாரேல்
மல்லோருந் தூற்றிப் பழித்திடுவர்—நல்லாய்! கேள்
கல்வியைப்போல் மேலாங் கருந்தனமொன் றில்லையெ
எல்லாரும் சொன்னார் இசைந்து. [ன்றே

எண்ணும் எழுத்துமிவை எல்லார்க்கும் கண்ணாகும்;
திண்ணம். இது நன்கறிதி சேயிழையே!—ஒண்டனத்
பெற்றார்க் கிரும்பெருமை யில்லை. இபவுலகில் [தைப்
கற்றார்க் கிலையோ கழறு.—விவேகோதயம்.

## ADVICE TO YOUNG MEN.
## மாணவர்களுக்கு புத்திபோதனை.

[1900-ம் வருஷம் சென்னை ஸர்வகலா சங்கத்தார் பட்டமளிக்கும் உற்சவம் நடந்தேறியபொழுது அந்தந்த பரீக்ஷைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தியார்கட்குப் பட்டங்களளிக்கப்பட்டபின் ஆனரபில் மிஸ்டர் எப், ஏ. நிகல்சன் கீழ்வருமாறு அவர்கட்குப் புத்தி போதனையாக பிரசங்கித்தார். அது இப்பொழுதும் வித்தியார்த்திகளுக்கு மிக அவசியமான புத்திமதிகளுடன் கூடியிருப்பதால் அப்பிரசங்கத்தின் சாராம்சத்தை விவேகசிந்தாமணி வாசிப்போருக்காகச் சுருக்கி எழுதுகிறோம்.]

"நீங்கள் எல்லாரும் இச்சர்வகலாச்சங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்று உங்கட்குச் சில உறுதிமொழிகளை உரைத்துக் களிக்க எனக்குச் சமயம் வாய்த்ததற்காக மிகச்சந்தோஷிக்கிறேன். நீங்கள் ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டுழைத்து வந்ததனால் உங்கள் குணம் பலப்பட்டிருக்கின்றது. உங்கள் மனதும் பழகி விசாலித்திருக்கின்றது. இடைவிடாத,

"முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்."

என்பதினுண்மையையும் முயற்சியொன்றிருப்பின் ஆகாததொன்றுமில்லை என்பதையும் அறிந்துகொண்டிருக்கிறீர்கள். இவ்விதமாகப் பழகிப் பலப்பட்டிருப்பதால் நீங்கள் உங்கள் சுயவிருத்தியைக் கவனிப்பது தகுதியே. ஆனால் அதுமட்டுமல்ல, நீங்கள் உலகத்தார் பொருட்டும் உண்மை கடைப்பிடித்தும், சுயநலம் பாராது அவர்களுடைய அபிவிர்த்திக்காக உழைக்கவேண்டுமென்றும் இச்சங்கத்தார் உங்களை ஆசிர்வதிக்கிறார்கள்.

மேலும் தங்கள் வருத்தங்களைக்கவனியாமல் சந்தோஷத்தோடு உழைத்தும் பல கஷ்டங்களையும் பொறுமையுடன் அனுபவித்தும் நீங்கள் இந்தப்பட்டங்களைப்பெற்று அவற்றின் பயனைபடைதற்குக் காரணபூதர்களாயிருந்த உங்கள் தகப்பன்மார் முதலினோர்களையும் நான் மறவாமல் அவர்கள் பக்கலும் நன்றி செலுத்துகின்றேன்.

இனி நீங்கள் எந்தக் கடமைகளைச் செய்தலுக்காக இதுவரையும் பழக்கப்பட்டீர்களோ அக்கடமைகளைப்பற்றிச் சில சொல்லுகிறேன்! 'இதுவரையும்' என்று ஏன் சொன்னேனென்றால் உங்கள் பழக்கமானது இதனோடு பூரணமாகாமல் நீங்கள் பழகப்பழக அது எப்போதும் இனிச்செய்யவேண்டிய கடமைகளின் அவசியத்தையே காட்டி நிற்கின்றதாதலினால் உங்கள் வித்தையானது எவ்வளவு பூர்த்தியானதாயிருந்தபோதிலும் அது நீங்கள் வருங்காலத்திற் செய்யவேண்டிய கடமைகள் இன்னவை என்று காட்டி அவற்றைச் செய்வதில் உங்கட்குதவுவதைத் தவிர வேறொன்றும் செய்யாது, நீங்கள் உலகவாழ்க்கையிற் பிரவேசிக்கும் இப்போதுதான் உங்களுக்கு எண்ணமும் செயலும் வழிகளும் மிக முக்கியமாயிருத்தல்வேண்டும். 'ஒரு எண்ணத்திலிருந்து செயலுண்டாகும், செயலிலிருந்து வழக்கந்தோன்றும், வழக்கத்திலிருந்து குணம் விளையும், குணம் முடிவிற்கு வழிகாட்டும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுநிற்க, நீங்களெல்லாரும் இப்போது கூறிய உறுதிமொழிப்படி அவரவர் சக்திக்குத் தக்கபடி ஜனங்களின் ஒற்றுமையையும் அபிவிருத்தியையுங் கோரி நடக்கவேண்டும். உங்கள் கீதையிலும் 'உன் காரியங்கள் உலகத்தாரின் க்ஷேமங்கருதியதாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் பெரியோர் எவ்வழி நடக்கிறாரோ அவ்வழியே உலகமுஞ்செல்லும். அவர் மேன்மையாகக் கொண்டதையே உலகமுங் கொண்டாடும்' என்று உரைக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணமனிதர்க்கே இது ஒவ்வுமென்றால் கற்றுத்தேர்ந்து விசாலித்த எண்ணங்களுடைய உங்கள் விஷயத்தில் அதிகமாக இருக்கவேண்டும். எவனுக்கு அதிகங் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவனிடத்தில் அதிகம் எதிர் பார்க்கப்படுகிறது. உதாரணத்திற்காகச் சில கடமைகள் குறிக்கின்றேன், ஏனென்றால்

இவ்வித பொதுவிதிகள் செய்கைக்கு வழி காட்டுவனவல்ல. விவசாயக்குறைவு அல்லது தேசத்தவரின் தரித்திரம் ஆகிய இதுபோன்ற விஷயங்களைத் திருத்தும் முயற்சியில் நம்மில் எவ்வளவுபேர் இது நம்மாலாகாதென்று பின் வாங்குகிறார்கள். ஏனென்றால் அவற்றின் பற்பல பகுதிகளைப்பிரித்து நோக்காது முழு மையும் நோக்கி அவற்றை இராசாங்கத்தார் பெரிய உபாயங்களாலும் சீர்திருத்தங்களா லும் நிவர்த்திக்கலாமே யன்றி நம்மாற் றனித் தனி ஒன்றும் செய்யமுடியாதென்று நினைக்கி றோம். ஆனால் உண்மையில் நாமெல்லாருந் தான் தனித்தனி அதற்கு உத்தரவாதிகளா கிறோம். நாம் நம்வாழ்க்கையை மற்றவர் களின் வாழ்க்கையோடு சமப்படுத்தி நம்முய ற்சிகளின் பலனை மற்றவர்களினுபயோகத்திற் குதவவேண்டும். இவ்விதமாகத் தனித்தனி அவரவர்களாலானது சிறியதேனும் சுத்தம் சக்திக்கியன்ற அளவு செய்துமுடிப்பதினா லேயே பெரிய விஷயங்களெல்லாம் நிறை வேறுகின்றன. நீங்கள் ஒரு பெரிய ராஜ்ய நிர்வாகம் பெறலாம் அல்லது பெறாமலிருக்க லாம். அதன்மத்தியில் உங்கள் நகரம் அல் லது கிராமத்தின் விவகாரங்களிலுதவி புரிய லாம். ஹைகோர்ட்டின் நீதிஸ்தானத்திலிரு ந்து நீங்கள் நீதிசெலுத்தும்படி உயர்ந்தாலும் உயராவிட்டாலும் உங்கள் சொந்த ஊரில் நேரிடும் வழக்குகளைத்தீர்த்து விரோதங்களைச் சமாதானப்படுத்தலாம். உங்கள் பக்கத்திருப் பவர்களுக்குள் நீதியும் சமாதானமும் நிலைக் கும்படி செய்யலாம். நீங்கள் வித்தியாபிவிர்த் திக்கு ஏற்ற பெரிய வழிகளைக் கண்டு பிடிக் காமலேயிருக்கலாம். ஆயினும் உங்கள் சொ ந்த கிராமத்தவரின் அறிவை விருத்தியாக்க லாம். கிராமப்பள்ளிக்கூடத் தினபிவிர்த்திக்கு உதவிபுரியலாம். பெண்கல்வியி னபிவிர்த் திக்கு பெரியயோசனைகள் நீங்கள் சொல்லா விட்டாலும் உங்கள் சொந்த வீட்டாருக்குப் புதிய எண்ணங்களும் அறிவும் புகட்டலாம். இதனாலேயே பல நன்மைகள் விளையும். நீங் கள் சுகாதாரவிஷயமாகப் பெரிய சீர்திருத் தங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தபோதிலும் உங்கள் கிராமக்கிணறு சுத்தமாயிருக்கிறதா என்றும் அதன் சுற்றுப்புறங்கள் சுககரமா யிருக்கின்றனவா என்றும் பார்த்துக்கொள்ள லாம். உங்கள் வீடு, பின்வாசல், கச்சேரி, வைத்தியசாலை முதலியன மற்றவர்கள் பார்த் துப்பழகும்படி பரிசுத்த முடையனவாயிருக் கப் பார்க்கலாம். பெரிய புத்தகங்களெழுதிப் பேர்பெறாவிட்டாலும் நீங்கள் அயலாரின் உப யோகத்திற்காகச் சிறுதுண்டுப் பத்திரிகைகள் எழுதி வெளியிடலாம். சுயபாஷையினபி விர்த்திக்காகச் சபைசேர்த்துழைக்கலாம். நீங் கள் பத்திராசிரியராக வராவிட்டாலும் அங் கங்கே அறிவைப் பரவச்செய்து பொய், விப ரீதஞானம் முதலியவற்றைப் போக்கி உண்மை புகட்டலாம்.

இவ்விதமாகப் பல வழிகளில் உங்கள் சிறிய பாகங்களை விர்த்தியாக்க முயலலாம். இப்படி நான் சொல்வதினால் உங்கட்குப் பெரிய எண் ணங்கள் வேண்டாமென்று நான் சொன்ன தாக நினைக்கவேண்டாம். சிறிய ஆரம்பங் களிலிருந்துதான் பெருங்காரியங்கள் நிறை வேறுகின்றன என்பது உங்கள் மனதிலிருக்க வேண்டுமென்பதே நான் எண்ணியது. அள வற்ற நன்மைக்கேதுவாகிய இப்போதைய சேவிங்ஸ்பாங்கி என்னும் ஏற்பாடானது முன்னே ஓர் பாதிரி தன் கிராமத்தில் செய்த சிறு பிரயத்தனங்களிலிருந்து உண்டாயிற்று. இவ்விதமாகவே ஐரோப்பாவில் பெரிய விவ சாய பாங்கிகள், பலபேர் சேர்ந்ததொழில் முயற்சிகள், முதலிய பிரபலமான காரியங்கள் எல்லாம் முதலில் ஒன்றிரண்டுபேரின் சிறிய முயற்சிகளிலிருந்து ஜனித்தன. ஆகையால்

சிறுவிஷயங்கள் நேரிடும்போது அவற்றை அலட்சியம்செய்யாமல் நன்றாக நம் சக்திக்கேற்றவாறு செய்துமுடிக்கப் பிரயத்தினப்படவேண்டும். எல்லாத் தொழில்கட்குந் தாயாகிய விவசாயத்தைக்குறித்துச் சில மொழி புகல நினைக்கின்றேன். நமது யூனிவர்சிடியானது மேற்கத்தியவற்றையும் பம்பாய் யூனிவர்ஸிடியையும் போலாது விவசாயத்திற்கென்று யாதொரு பட்டமுமளிப்பதில்லை. ஆனால் மேற்பார்வைக்கு அது அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் வாழ்க்கை முழுவதும் தேசக்ஷேமத்திற்காக உழைக்கவேண்டுமென்று நேரே கருதப்படுகிறது. ஆதலின் தேசமுழுதும் விவசாயமே நிறைந்து ஜனங்களிற் பெரும்பாலர் விவசாயிகளாயுள்ள இத்தேசத்தில் இப்போது, அதுவும்கொடிய பஞ்சம் பரவி நம்மைப் பலவழியிலும் வருத்தும் இக்காலத்தில், நீங்கள் விவசாயத்தைப்பற்றிச் சிறிது நேரம் யோசிக்குமாறு நான் வேண்டுகிறது ஆச்சரியமல்ல. இவ்வாறு அடிக்கடி பஞ்சம் நேரிடுதலும் வீணிற்கா? அவையெல்லாம் கடவுளொருவர் நாமோவ்வொருவரும் தனித்தனி பஞ்சத்தையும் தரித்திரத்தையும்கொஞ்சமாவது குறைக்கக்கூடியதாக விவசாய அபிவிருத்திகள் செய்ப்முடியாதா என்று எண்ணச்செய்கிறார் என்பதைப் புகட்டவில்லையா? இவ்வித மடிக்கடி நிகழும் கஷ்டத்திலிருந்து நாம் ஏதாவது நிலைத்த சுகத்தைபடைய முடியாதா?

'உழுவா ருலகத்தார்க் காணியஃதாற்ரு,
தொழுவாரையெல்லாம் பொறுத்து'.
'பலகுடை நீழலுந்தங்குடைக் கீழ்க்காண்ப,
ரலகுடை நீழலவர்'.

என்ற குறளிற்கூறியாங்கு நம் நாட்டிற் கிடைக்கக்கூடிய நற்றொழிலீதுவே.

இராஜாங்கத்தின் பலமே விவசாயிகளைப் பொறுத்திருக்கிறது. ஆதலினால் அவர்களின் க்ஷேமத்தையும் அபிவிர்த்தியையும்பற்றி கவனித்தல் கற்றறிந்தோர்க் கின்றியமையாக் கடனாகும். இராஜாங்கத்தார் எவ்வளவு பிரயத்தினஞ்செய்தாலும் புத்தகங்கள் எவ்வளவு எழுதப்பட்டாலும் பிரசங்கங்கள் எவ்வளவு செய்யப்பட்டாலும் கற்றறிந்தோர் தனித்தும் ஒன்று சேர்ந்தும் ஊக்கத்தோடு உடனிருந்து உழைத்தாலன்றி விவசாயவிர்த்திக்கு ஒன்றும் செய்யமுடியாது. மேற்கத்தியாருடைய உதாரணத்தைப்பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இங்கிலாந்தில் நிலங்கட்குடையவர்களாகி அவற்றை விருத்திசெய்யும் மிராசுதாரர்கள் பெரும்பான்மையும் யூனிவர்சிடிகளிற் கற்றுத்தேர்ந்தவர்களா யிருப்பார்கள். அவர்களனுமதியின்பேரில் அந்நிலங்களைச் சாகுபடிசெய்வோரும் வெகுவாய் அவ்விதமாகவே கற்றவர்களாயிருப்பார்கள். இராஜ்ய விவசாயச் சங்கத்தார் கட்டுரைப்படி இவர்கள் அறிவைப் பழக்கத்திற் செலுத்தி நடத்திவருகிறார்கள். மேலும் விவசாயத்திற் கற்றறிந்தோர் கருத்தைக் கவரக்கூடிய விஷயங்களும் பலவுள்ளன. நிலத்தின் சாராம்சம், எரு, விளைவு, வேண்டிய கருவிகள் முதலிய பல விஷயங்கள் இவர்கள் கவனித்தற்கேற்றவையா யிருக்கின்றன. இவ்விஷயத்திலும் நீங்களோவ்வொருவரும் வேறு பெரிய வழிகளொன்றுங் காணவிட்டாலும் தத்தம் அயற்பக்கங்களி னபிவிர்த்திக்காகச் செய்யும் முயற்சி சிறிதேனும் இடைவிடாது செய்து மற்றவர்கட் குதாரணங்காட்டலாம். உங்கள் மற்ற வேலைகள் எவ்வளவு மிகுதியாயிருந்தபோதிலும் நிலமும் அதன் பலனும் எப்போதும் உங்கள் கவனத்துக்கு வந்துகொண்டேயிருக்கின்றது. அன்றியும் உங்களிற் பலர்க்கு நிலமே உங்கள் வரும்படிக்கு முக்கிய ஆஸ்பதமாயும் அதுவே உங்கள் உழைப்பிற் கிடமாயும் இருக்கும். "இப்போதுள்ளவர்களையும் பின் சந்ததியாரையும் கவலையின்றி யிருக்கச்செய்பக் கூடியதாய், உழைத்தால் நல்விளைவுதரும் ஒரு

சிறு நிலமும் ஒரு நல்ல சிறுவீடும் இருந்தால் அதுவே ஒருவன் அடையக்கூடியது. பெரிய லட்சாதிபதியாயிருப்பதிலும் நான் அதையே அடைய விரும்புவேன். அதுவே மிகக் கண்ணியமானவேலை என்பதென்கொள்கை. அது தான் கடவுள் தரக்கூடிய பெரியவரம்" என்று ஜார்ஜ் இலியட் அவர்கள் ஓரிடத்திற் கூறியிருக்கிறார். நம் நிலம் சிறியதாயிருப்பினும் நாம் உழைக்குமிடம் கிராமமாயிருப்பினும் இவ்விதமாகத்தான் கருதவேண்டும். நீங்கள் இப்போது நேரே நிலவிளைவைப்பார்ப்பதே தொழிலாகப்போனாலும் அல்லது ரிவின்யூ, பாரெஸ்டு, வைத்தியம், சுகாதாரம் அல்லது வித்தை ஆகிய எந்தப்பிரிவில் வேலையாகப் போனாலும், நீங்கள் நிலத்திற்காகவும் அதைப் பயிரிடுவோருக்காகவும் செய்ய வேண்டிய வேலை அதிகமுண்டு. விளைவை இரட்டிப்பாக்கல் முதலிய பெரிய விஷயங்களொன்றும் நீங்கள் கண்டுபிடித்துச் செய்யாவிட்டாலும் உழைத்து அதனால் விளைவின் பலனை அதிகமாக்கலாம். நீர்ப்பாய்ச்சல் நிலத்திற்கோர் பாதுகாப்பா? அப்படியாயின் உங்கள் சொந்த நிலங்களிலெல்லாம் ஒவ்வோர் கிணறுவெட்டுங்கள். உங்கள் அயலாருக்குச்சொல்லி அவர்களையும் அம்மாதிரிசெய்யச் செய்யுங்கள். கால்நடைப் பிராணிகட்கு உணவு இடம் முதலிய ஒன்றுயமையாதிருப்பின் உங்கள் சொந்த கால்நடைகளை முதலிற் கவனித்துக்கொண்டு மற்றவர்கட்கும் அவ்வாறே உபதேசியுங்கள். விளைவை அதிகரிக்கும் வழி ஏதாவது உங்கட்குத் தெரிந்திருந்தால் அதைப் பொறுமையுடன் உங்கள் நிலங்களிற் பரீட்சித்துப் பாருங்கள். பயிர்கள் நோய் முதலிய தீங்குகளால் அழிவுறுமாயின் அதை நன்குய்க் கவனித்து அவற்றை அகற்றும் வழியைக் கண்டு பிடிக்கலாம். காடுகளும் மரங்களும் பழமரங்களும் குறைவாயிருக்கக்கண்டால் நீங்கள் ஏதாவது காலியிடத்தில் சில மரங்கள் வைக்கவாவது சில விடத்தை வேலியிட்டுச் சீர்படுத்தவாவது முடியுமா என்று நோக்கலாம். கிணறு வெட்டலும் மரம் வளர்த்தலும் இரண்டு பெரிய தர்மங்கள் என்று உங்கள் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தாலியா தேசத்தில் ஒரு குழந்தை பிறந்ததானல் அதற்குச் சீதனமாகும்பொருட்டு அது பிறந்த உடனே சில பழமரங்களை வைத்தல் வழக்கமா யிருக்கின்றது. இவ்விதமாக வெல்லாம் நீங்கள் முயன்று உங்கள் சொந்த கிராமத்தையும் நகரத்தையும் விருத்திக்குக்கொண்டு வர முயலலாம். பயிரிடும் குடிகளின் க்ஷேமத்திற்கு ஏதாவது தடைகள் நேரிட்டு அவற்றைப் போக்க ஏதாவது வழிகள் உங்களுக்குத் தோன்றுமானல் அவற்றை நன்காராய்ந்து அவ்வழிகளை விளக்கமாய் அமைதியோடு எடுத்துக்காட்டுங்கள். உங்கள் அயலாரின் பிள்ளைகள் ஒழுங்கீனமாய்க் கற்பிக்கப்பட்டுத் திரிவார்களேயானல் கிராமப் பள்ளிக்கூடத்தைத் தக்கபடி சீராக்க முயலுங்கள். உங்கள் கிராமத்தார் கண்டபடி எல்லாம் வீண் செலவுசெய்து தரித்திரர்களாயும் தரகர் முதலினேரால் பலவழிகளில் ஏமாற்றப்பட்டும் இருப்பார்களேயானல் அதைக் கவனித்துப் பல தக்கவழிகளாலும் அவர்களுட் பொருள்சேரும்படி செய்யலாம்.

இனி உங்களில் ராஜாங்க உத்தியோகங்களிற் பிரவேசிக்கின்றவர்களுக்குச் சிலமொழி புகல்கின்றேன். நீங்களிவ்வளவு கற்றதின் பயனுவது உங்கள் வேலைகளில் யூகத்தை யுபயோகித்து இராஜ்யபரிபாலன யந்திரத்தின் பல பாகங்களையும் சீராக்கிச் சம்பூரணமாக்க முயலுதலும் இப்போது சாதாரணமாய் வழங்கும் வழக்கங்களை ஆராயாது பின்பற்றுமல் அவற்றைக் கவனித்துச் சீர்படுத்துவதேதாவ

திருந்தால் செய்வதுமேயாம். வேலைசெய்யும் வழிகளும் அவற்றின் மேற்பார்வையும் சரியாயிருக்கின்றனவா என்ற கவனத்தோடு நில்லாமல் அடிப்பட ஆராய்ந்து அவற்றின் அர்த்தமின்னதென்பதையும் அவை இன்னதற்காக ஏற்பட்டனவென்பதையும் தெரிந்துகொண்டு அவை அவ்வவ் விஷயங்கட்குபயோகமாகின்றனவா என்று பார்க்கவேண்டும். இல்லாவிடின் தக்கவாறு மாற்றமுடியுமா என்று நோக்கவேண்டும். உங்கள் வாழ்க்கையில் பெரும்பான்மையும் சிறுசிறு விஷயங்களும் கடமைகளுமே நிறைந்திருக்கும். யந்திரத்திற்கு எண்ணெயிடுவதுபோல சிறிதாகக் காணும் இவ்விஷயங்களைச் சரியாகவும் ஜாக்கிரதையாகவும் செய்து முடித்தலே வாழ்க்கையின் பயனும். நீங்கள் யாவர் மத்தியிலிருந்து வேலை செய்கிறீர்களோ அச்சனங்களின் நிலைமையில் நீங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டு அவர்களின் முறைப்பாடுகளையும் குறைகளையும் ஆகவேண்டுவனவற்றையும் அறிந்துகொள்ள முயலுங்கள். மற்றவர்கள் உங்களிடத் தெவ்வாறு நடந்துகொள்ள நினைக்கிறீர்களோ அவ்வாறே நீங்களும் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்வீர்களானால் உங்கள் வேலைகள் எப்போதும் நன்முடிவேபெறும். முடிவாக உங்கள் நடத்தையும் செய்கையும் எப்போதும் மிக மேன்மையானவையாகவே இருத்தல்வேண்டும். உங்கள் சக்திக்கெவ்வளவு கூடுமோ அவ்வளவு பெரிய ஸ்தானங்களையே அடையமுயலுங்கள். ஜனங்களை முன்னுக்குக் கொண்டு வருவதில் உங்களுக்குப் பக்கத்திருப்பவரையே மிக எளிதில் வழிப்படுத்தலாம் என்பதை மறக்கக்கூடாது. ஆனால் தக்கசெய்கைகளில்லாமல் வெறும் கனவு காணும் எண்ணங்களில் மட்டும் அமிழ்ந்துபோகவேண்டாம். நாம் செய்யும் முயற்சிகளாலும் செய்துகாட்டும் உதாரணங்களாலுந்தான் சூழவுள்ளவர்கள் இணங்கி வழிப்படுகிறார்கள். உங்கள் காலம், முயற்சி, இன்பம், பொருள் நலம் முதலியவற்றைச் செலவிட்டுச் செய்யும் காரியங்கள்தான் உங்கள் சூழவுள்ளாரின் க்ஷேமாபிவிர்த்திக்குப் பெரும்பாலும் உபயோகமானவை."

இதுகாறும் நாம் மொழிபெயர்த்து வந்த பிரசங்கத்தினால் மிஸ்டர், எப். ஏ. நிகல்சன் அவர்களுடைய அனுபவமும் ஆழ்ந்த எண்ணங்களும் வெளியாவதன்றியும், தத்தம் படிப்பை முடித்து அப்போதுதான் உலகவாழ்க்கையிற் புகும் மாணவர்கட்குத் தக்க புத்திமதிகள்தாமென்பதும் விளங்கும். அவர்கள் அன்றையதினம் பேசியது மிக நன்றாயிருந்தது. இவர் பிரசங்கத்தின் மொத்தக்கருத்து என்னவென்றால் நாம் செய்யுங்காரியம் சிறியதேனும் பெரியதேனும் திருந்தச்செய்யவேண்டும். சிறியதைச் சிறிய தென்றிகழக்கூடாது. சிறியதையிகழ்ந்தால் சிறியதும் பெரியதும் இரண்டுங்கெடும் என்பதே. இவர் பிரசங்கம் மொத்தத்தில் இந்துக்களின் புத்திப்போக்குக்கு ஒத்திருந்தது. நம்மவர்கள் எப்போதும் திருப்தியையும் மனவமைதியையுமே பெரிதாகக் கருதுபவர்கள், 'செய்வன திருந்தச்செய்' என்பது ஔவையார் கூற்று.

---

"காரணமில்லாமல் எனக்குத் தீங்கிழைப்பவனுக்கும் என்னாலாகிய நன்மையைச் செய்வேன். ஒரு சிறிதும் அவனை வெறுக்கமாட்டேன். வெறுப்பை வெறுப்பினால் ஜயிக்கமுடியாது. அன்பினால் ஜயிக்கலாம். தீமையை நன்மையால் வெல். பேராசை பிடித்தவர்களிடம் தாராள குணத்தைக் காட்டு. பொய்யனுக்கு உண்மையின் உயர்வை உபதேசம் செய். பதிலுக்குப் பதில் தீமை புரிபவர்களுடைய குணம் எப்பொழுதும் சுத்தமாகாது. கொடியோன் புரியும் தீச்செயல்கள் விருத்தியாகாது போலவே, நாம் அவனுக்கியற்றும் நற்றொழில்கள், உபகாரங்கள் அதிகமாகவேண்டும்.—கௌதமபுத்தர்.

From "Sacred Thoughts."

## THE FESTIVAL OF LAMPS.

## கார்த்திகை தீபம்.

(ஒரு மாது செய்த ஹிதோபதேசம்.)

"நமதரியநாட்டில் தொன்றுதொட்டு நடக்கும் அநேக காரியங்களின் பொருள் இன்னதென்று தெரியாமலே நம்மில் பலர் அவைகளை அனுசரித்து வருகிறார்கள். பழக்க வாசனையின்பேரில் பலர் செய்வதைப் பார்த்து மற்றவர்களும் செய்கிறார்களே யன்றி, செய்யுங்கருமத்தை ஏன் செய்யவேண்டும் என்கிற கேள்வி நம்மில் பிறப்பது அரிது. நெடுங்காலமாக, தேசத்தில் அனுசரிக்கப்படுவது சரியானதாகவே யிருக்குமென்கிற நம்பிக்கை, நம்மில் அமைந்து கிடக்கிறது. பெரியோர்களால் ஏற்பட்டதும், நாளதுவரை நடைபெற்று வருவதுமானவை நன்மை உண்டாக்கத்தக்கதாகவே யிருக்கலாம். ஆனால் அவைகளைப்பற்றி விசாரித்து அவைகளில் அடங்கிய பொருளைத் தெரிந்துகொள்ளாதிருப்பது, நமது குற்றமேயன்றி, அவைகளைப்பற்றி நாம் விசாரிக்கக் கூடாதென்கிற எண்ணத்துடன், அக்காரியங்களை முதியோர் செய்திருப்பார்களென்று தோன்றவில்லை. நாளதுவரை நடந்துவரும் ஒவ்வொரு காரியத்தைப்பற்றியும், நாம் விசாரித்து, ஒவ்வொன்றின் அந்தரங்கப் பொருளைத் தெரிந்துகொள்ளவேண்டு மென்கிறதே, பெரியோர் உத்தேசமாய் இருக்கவேண்டும்" என்பதை ஸ்தாபிக்க ஓர் ஹிந்து சகோதரி "கார்த்திகை தீபம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு ஒரு உபந்நியாசம் எழுதி வாசித்தார். அவ்வுபந்நியாசம், ஹிந்துமாதர்கள் விவேகிகளாகி அறிவாராய்ச்சியுடன் நடந்துவந்தால் நமக்குள்ளிருக்கும் கெட்ட வழக்கங்கள் எவ்வளவு நீங்கிச் சீர்படுமென்பதை விளக்குவதால் அதைக் கீழே பிரசுரிக்கிறோம். அந்த அம்மணி சொல்கிறாள்: "ஒவ்வொன்றைப்பற்றி விசாரித்துத் தெளியவேண்டுமென்கிற இச்சை என்னுள் சிலகாலமாய்த் தோன்றியிருப்பதினால் கார்த்திகை தீபத்தின் வரலாற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள பிரயாசைப்பட்டேன். நன்குணர்ந்த ஓர் பெரியவரைக் கேட்டேன். அவர் நீ இது விஷயமாய் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும் சொல்வாயானால் பொருள் சொல்லுவேன், என்றார்.

"கார்த்திகை தீபத்தினன்று பக்தர்கள் நாள் முழுவதும் உபவாசமிருந்து, சாயரட்சை ஸ்நான முதலானவை செய்து சுத்தி செய்யப்பட்ட வீட்டின் முற்றத்தில் மாவிளக்கேற்றி, கர்ப்பூர ஆர்த்திசெய்து திருவண்ணாமலை யிருக்கும் திக்குநோக்கி நமஸ்காரம் செய்கிறார்கள். அனேகர், வீட்டில் செய்யாமல் அருகிலுள்ள ஆலயங்களுக்குப்போய் மாவிளக்கேற்றி தீப தரிசனம் செய்துவந்தபிறகு சாப்பிடுவார்கள். கோயில்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். கோபுரத்தின்மேல் அகண்டவிளக்கேற்றுவது முண்டு," என்றேன்.

ஆம், இவைகளைப்பற்றி உனக்கு என்ன தெரியவேண்டுமென்று அப்பெரியவர் கேட்டார். இச்செய்கைகள் என்ன பொருளைக் கொண்டிருக்கின்றன, தயைசெய்து சொல்லக் கோருகிறேனென்றேன். அதின்பேரில் திருவண்ணாமலை யிருக்கும் திக்குநோக்கி பார்க்கிறார்களென்றாயே, அம்மலையைப்பற்றி யாராவது, ஏதாவது, எப்போதாவது, உனக்குச் சொல்ல கேட்டதுண்டா, என்றார்.

ஆம், சுவாமி, அக்கினிமலையாய் ஒருக்கால் தோன்றினதாகவும் பிரம்மாவும், விஷ்ணுவும் முறையே அவரது முடியையும் அடியையும், காணப் பிரயாசைப்பட்டும் அவ்விருவருடைய முயற்சி வீணாய்ப்போனதாகவும், பிரம்மாமாத்திரம், காணாத முடியைக் கண்டதாய்ப் பொய் சொன்னதால், பிரம்மாவுக்கு கோயிலில்லாமல் சாபம் கிடைத்ததென்று சொல்லக் கேட்டேனென்றும், சொன்னேன். ஆம் நீ சொன்னது அநேகமாய் அனுபவத்தையும் புராணத்தையும் ஒட்டியிருக்கிறது. உனக்கு உற்

றுணர்ச்சி யிருக்கிறதென்று வெளியாகிறது; ஆகையால் அதின் சகாயத்தைக்கொண்டே, நீ இன்னும் சற்று ஆழ்ந்து யோசிப்பாயானால், நீ கண்டதும் கேட்டதுமாகிய ஒவ்வொன்றிற்கும் பொருள் உனக்கே வெளியாகும். இச்செய்கைகளிலும் புராணசங்கதியிலும், கவனிக்கத்தக்கதாகிய சிறந்தபொருள்கள் என்ன விருக்கலாம் என்கிற நோக்கத்துடன் ஆலோசனைசெய் என்றார்.

அவர் அப்படிச் சொன்னபோது சற்றுநேரம் எனக்கு ஒன்றும் தோன்றாதிருந்தது. பிறகு உபவாசம், ஸ்நானம், மாவிளக்கு, தீபதரிசனம் ஆகிய இவ்வமிசங்களைப்பற்றி யோசனை பிறந்தது.

உபவாசத்தால் சிலமுறை அஜீரண முதலியவை நீங்கி தேகம் நன்னிலைக்கு வரக்கூடும். மெலிந்த தேகிகளுக்கு உபவாசத்தால் தீங்கு நேரிடலாம். "நாளுங்கிழமையும் நலிந்தோர்க்கில்லை" என்றதனால் அவர்களுக்கு உபவாசமில்லையென்று ஏற்படும். "லங்கணம் பரம அவுஷதம்" என்பதினால் வலுத்ததேகிகளுக்கே சமயோசிதமாய் கையாடுவதினால், உபவாசம் நன்மை பயக்குமென்று தோன்றினது.

ஸ்நானம்—தேக சௌக்கியத்திற்கு முக்கியமான அனுகூலங்களில் ஸ்நானம் ஒன்றென்று சுகாதார விளக்கத்தில் நான் படித்திருப்பதோடு அனுபவசித்தமாயும் கண்டிருக்கிறேனாதலால் அது நல்லதென்றே தெளிந்தேன். தீபம் இருளை நீக்கி வீடுகளுக்கு சிறந்த அலங்காரத்தை உண்டுபண்ணுவதால் அது நல்லதென்றே வெளியாயிற்று. சுத்த அரிசியை ஊரவைத்து மாவாகத்திரித்து குவியலிட்டு நடுவில் சிறுபள்ளங்கோலி, நெய் வார்த்து வர்த்தியிட்டு விளக்கேற்றுவதின் இரகசியம் எனக்குத் தெரியவில்லையென்று சொன்னேன். பிறகு திருவண்ணாமலைச் சரித்திரத்தில் நீ ஏதேனும் சிறந்த பொருளைக் கண்டாயா என்றார்.

சிறிதுநேரம் யோசித்தபிறகு என்னுள் இந்த யோசனைகள் பிறந்தன.

பரம்பொருளின் ஆதியும் அந்தமும் பிரம்மா விஷ்ணு வென்கிறவர்களே காணமுற்போனால் மற்றெவர்தான் தெரிந்துகொள்ளக் கூடும். எந்த விதத்திலும் முடிவில்லாதவனென்று இச்சரிதையால் தெரியவருகிறது. மேலும் தான் காணுததைக் கண்டதாய் சொன்ன பொய்க்காக பிரம்மாவுக்கு எங்கும் கோயிலில்லாமற் போயிற்றல்லவா? பொய்கெட்டது என்று தெரிந்தேன் என்றேன். ஆ, நன்றாகச் சொன்னாய், கார்த்திகை தீபத்தில் உள்ள இரகசியத்தை வெகுவாய்த் தெரிந்துகொண்டாய். இவ்வாறு நாம் காண்பதும் கேட்பதுமான விஷயங்களைப்பற்றி பொறுமையாய் சிந்திக்கத் தலைப்படுவோமானால், அவைகளிலுள்ள பொருள் நமக்கு தெரியாமற்போகாது. அறிவாளிகளைக்கொண்டு விசாரிப்பதினால் மறைவாய்க் கிடக்கும் சில பாகங்களுக்கு பொருள் விளங்கும் என்று சொல்லிவிட்டு, பிறகு ஒவ்வொரு பாகத்தைப்பற்றி, எனக்கு நன்றாய்ப்படும்படி விரிவாக எடுத்துரைத்தார். நான் தெரிந்துகொண்டதில் எனக்கு ஞாபகமிருப்பதை, இங்கு உங்களுக்கு தெரிவிக்க ஆவல்கொண்டவனா யிருக்கிறேன்.

"ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவேனும் மன்னமிட்டுண்மின்—தெய்வ
மொருவனேயா மென்றுணரவல்லீரே
லிருவினைக ளைந்துமறும்."

இச்செய்யுளில் நமது ஔவைபிராட்டியார் தெய்வம் ஒருவனே என்றார் அல்லவா? உலகத்தில் யாவருக்கும் இவ்வித பாவம் கிடையாது, பல தெய்வங்களுண்டென்பது அவர்களது கருத்து. ஒன்றென்று கொண்டவர்கள் தெளிந்தவர்கள், மற்றவர்களுந்த அப்படி கொள்வது பிரயாசை என்று நமது பாட்டியார் தெரிந்தவராதலால் "ஒருவனே யென்று உணரவல்லீரேல்" என்றார். மனத்தேர்ச்சியுடையோர்க்கே அப்பாவனை பொருந்தும். சாமானியர் கொண்டிருக்கும் பல தெய்வங்களில், பிரம்மா, விஷ்ணு, சிவம் ஆகிய திருமூர்த்திகள் மேம்பட்டவர்களாதலால் சைவ

சமயத்தோர் தங்கள் தெய்வம் என்ற சிவத்தை உயர்வாகவைத்து மற்றிருவரையும் அவருக்குத் தாழ்வென்றும், விஷ்ணுவை உயர்வாக வைத்து மற்றிருவரையும் அவருக்குத் தாழ்வென்று வைஷ்ணவர்கள் சொல்வதும் வழக்கம். ஒரு பொருளுக்கு பல நாமம் அமைத்து ஒரு பெயரை உயர்த்தியும் மற்றப்பெயரை அதற்குத் தாழ்வாகவும் சொல்வதினால் பொருள் வேறுபடாதென்று சற்று யோசிப்போருக்கு எளிதில் புலப்படும். திருவண்ணாமலையைப்பற்றி ஸ்தலபுராணத்தில் சிவத்தையுயர்த்திப் பேசியிருக்கிறது. சிவம் என்று இந்த அவசரத்தில் சொல்லப்படும் பரம்பொருள் அகண்டமானது.

நம்மைச் சுற்றிலும் மேலும் கீழும் எங்கும் பரந்திருக்கும் ஆகாசமென்ற வெறுவெளிக்கு நமது பாவனாசக்தியைக்கொண்டு அடிமுடி எங்குண்டென்று பார்ப்போமானால் ஆதி அந்தம் ஏற்படாது. இப்பெருவெளியை உடலாகக்கொண்டிருக்கும் ஞானஸ்வரூபியாகிய பரம்பொருளுக்கு ஆதியந்தமில்லை என்கிற உண்மையை அறிவிக்கும்பொருட்டு பிரம்ம விஷ்ணுக்களாலும் அடிமுடி தெரியப்படாதது என்று புராணத்தில் காட்டியிருக்கிறது. தன்னால்தான் அறியப்படுமேயன்றி மற்றவர்களால் அவரது பெருமையைக் காண்பது அசாத்தியம்.

பொய், கொலை, களவு, கள், குருநிந்தை என்னும் பஞ்சமா பாதகங்களில் பொய்யை பிரம்மா சொன்னதினால் தருமசுவரூபியாகிய கடவுள், பிரமனுக்கு கோயிலில்லாமற் செய்து விட்டாரென்றால் மற்ற மானிடர்கள் பொய் சொல்வதினால் வருங் கதியை அவரவர் கணித்துக்கொள்ளவேண்டுமென்றும், பொய் சொல்வதாகிய இழுக்கை, ஒவ்வொருவரும் விட வேண்டுமென்பது புராணத்தின் கருத்து. உலகத்தில் உண்மை யின்னதென்று கண்டுபிடிப்பதற்குத்தான் ஞானிகள் பெரும்பாடு படுகிறார்கள். இதற்கு இடையூறாக உலகத்தில் பொய் பெருகுமானால், உண்மை வெளியாகாது, துன்பம் அதிகரிக்குமாகையால் பொய் பேசுவதை ஒவ்வொருவரும் ஒழிக்கவேண்டும். பொய் பேசப்படாதென்கிற நெறி ஒன்றை ஒவ்வொருவரும் கைக்கொள்வார்களானால், மற்றெல்லா பாதகங்களும் ஒழிந்து போம். ஒழிக்கவேண்டிய பாபகிருத்தியங்களைவிட்டு உலகத்தில் உள்ளநாள் உள்ளமட்டும் நாம்நடத்தும் இல்லற விவகாரங்களில் தருமங்களை தப்பாமலும், எங்குமிருப்பதால் நம்முள்ளத்திலும் சாட்சியாயிருக்கும் பரம வள்ளலினது அங்கீகாரம் பெறுவதே நமது கடமையென்று சீராக நடந்துவருவோமேயானால், நமதுள்ளம் தூய்மையடையும், அன்பு உண்டாகும், அறிவு ஒளிவடையும். இப்பொருளை உணர்த்துவதற்கு மாவிளக்கு. மாவின் வெண்மை மனத்தூய்மை. அதில் பெய்யும் நெய், அன்பு. எரியும் வர்த்தி, அறிவின் விளக்கம். ஆகிய இம்மூன்றும் நம்மில் உண்டாம்போது எங்கும் ஜெகதீசனை பிரகாசமாய் அறிவோம். கடவுள் ஜோதி சொரூபியென்று விளக்குவது சொக்கப்பனை. குன்றுமேலிட்ட விளக்கு நன்றாய்த் தெரிவது போல மனத்தூய்மை அன்பு முதலியவற்றை அடைந்தவர்களுக்கு மேலான சுயம்பிரகாசரூபியாகிய கடவுள் நன்றாய்த் தெரியவருமென்னும் கருத்தைக்காட்டுவது கோபுரத்தின்மேல் வைக்கும் தீபம்.

உபவாசம்—ஒருவேளை சாப்பாட்டை குறைப்பது அல்லது முற்றும் விட்டிருப்பதனால் மிகுந்த நன்மை யுண்டாகாது. ஒருக்கால் கெடுதி உண்டானாலும் உண்டாகலாம்.

அகங்காரம், லோபம், காமம், பகை, போசனப்பிரியம், கோபம், சோம்பல் ஆகிய துர்க்குணங்கள் நம்மில் வளரவொட்டாமல் அடக்க வேண்டுமென்பது உபவாசத்தின் கருத்து. இவ்வுண்மையறியாது மேற்சொன்ன படி

தேகத்திற்கு தீங்கை விளைவிக்கும் காரியமாவது அல்லது வழக்கவுணவை மாற்றி பல ஆகாரங்களை சாப்பிடுவதனாலாவது உபவாசத்தின் பயன் நிறைவேறாது. மேற்குறித்த பாதகங்களுக்கு நம்மில் கொஞ்சமிடம் கொடுத்தோமோ, அவைகள் நம்மை அடிமையாக்கி, தீராத்துன்பங்களுக்கு உள்ளாக்குமாதலால், அவற்றை சாக்கிரதையாய் ஒழிக்க வேண்டுமென்பது உபவாசத்தின் கருத்து.

ஸ்நானம்—சுத்த ஜலத்தினால் தேகத்தைக் கழுவினால் சரீரத்திலுள்ள அழுக்கு எப்படி போமோ அதுபோல் ஆத்துமா ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம். உள்ளத்தில் குடிகொண்டிருக்கிற வள்ளலினது மங்கள குணங்களாகிய கடலில் முழுகியிருக்கவேண்டுமென்பது ஸ்நானத்தின் கருத்து.

தீபதரிசனம்—ஞானஸ்வரூபனாகிய கடவுளை நமது அறிவினால் தெரியவேண்டுமேயன்றி மற்றெதினாலும் காணக்கூடாதென்கிற உண்மையை விளக்கும்பொருட்டு, கடைசியில் தீபதரிசனம் செய்யவேண்டுமென்கிறார் பெரியோர். எல்லாம் அறிவின் சகாயத்தால் ஆகவேண்டியிருப்பதினால் அதனை விசேஷமாய்ப் பெற பிரயாசைப்படவேண்டும்.

இத்தன்மையான உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருக்கிறது கார்த்திகை தீபம்.

இதைப்போல் நம் நாட்டில் வழங்கிவரும் விரதங்களைப்பற்றி அது நேருந்தோறும் விசாரணைப் புருஷர்களைக்கொண்டு அவற்றின் உட்கருத்துகளைத் தெரிந்து நலமடையவேண்டும்.

"சொல்லிற் பதர் களைந்து சொன்முடிவு காணாதார்
நெல்லிற் பதர்போல் நிற்பார் பராபரமே."

எதை நாம் படித்தபோதிலும் கேட்டபோதிலும் அதிலுள்ள சாராம்சத்தை விசாரித்து தெளிந்து நன்மை யடையும்பொருட்டு நமக்கு ஈசன் அருள்புரிவாராக.

## CHARACTER SKETCH: PALISSY THE POTTER.

## குணவலி விளக்கம்: பெயர்பெற்ற குலாலர் பலிஸ்ஸி என்பவர் சரித்திரம்.

### பொறுமையின் சிலாக்கியம்.

"மனோபலத்தின் ஓர் அங்கமாகிய பொறுமை என்பது மிக நுண்ணியது, கனம் மிக்கது, அரியது. போகம் அனைத்திற்கும் பராக்கிரமம் அனைத்திற்கும் மூலம் பொறுமை; பொறுமை இல்லாவிடில் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாய்விடும்"—ஜான் ரஸ்கின் (John Ruskin.)

மட்பாண்டம் வனைதொழில் வரலாற்றில் பொறையும் கருமமுடிக்கும் துணிவும் பூர்த்தியாயுள்ள சிலருடைய சரித்திரத்தைக்காணலாம். அவர்களில் மிகவும் சிலாக்கியமானவர்களெனக் கொண்டாடத் தக்கவர்கள் மூன்று பேர்கள். அவர்களில் ஒருவர் பிரான்சியராகிய பெர்னார்ட் பலிஸ்ஸி (Bernard Palissy); மற்றொருவர் சாதியில் ஜர்மானியரான ஜோஹான் ப்ரேட்ரிக் பத்தர் (Johann Friedrich Bottg-her); பின்னொருவர் அங்கிலேயராகிய ஜோஸையா வேட்ஜ்வூட் (Josiah Wedg-wood.) இவர்களில் முதற்சொன்னவர் சரித்திரத்தையே இங்கு விவரிக்க எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

### மட்பாண்டம் வனைதொழிலின் புராதன நிலைமை.

சாதாரணமாய் வழங்கும் விதவிதமான பாண்டம் களிமண்ணிற் செய்யும் உபாயம் பூர்வத்தார் வெகு பெயருக்குத் தெரிந்திருந்தும், பளிங்கெனத் துலங்கும் நாணயமான மட்பாண்டம்[1] வனைதொழிலோ அபூர்வமாய் வழங்கியது. ஆனாலும் முன்னாளில் 'எட்ரஸ்கர்'[2] என்பவர்கள் அவ்வகைப் பாண்டம் வனையப் பயின்றிருந்தார்கள். அவர்கள் கையால்

1. பீங்கான்=Enamelled Earthenware.
2. Etruscans.

வனைந்த பாண்டங்கள் சிலவற்றைப் புராதன வஸ்துக்கள் வைக்கப்பட்டிருக்கும் சாலைகளில் இன்றளவும் காணலாம். பின்னிட்டு நெடுநாள்வரையில் அவ்வித்தை கைகடந்து போய் இப்பொழுது கொஞ்சக் காலத்திற்கு முன்னேதான் மீளவும் அகப்பட்டது. பூர்வ காலத்தில் எட்ரஸ்கர் செய்த பாண்டம் விலையேறப்பெற்றது. ஆகஸ்தஸ் இருந்த காலத்தில் உண்கலத்திற்கு விலை விகிதம் இருத்தல் ஒன்றுக்கு ஒரு இருத்தல் தங்கம். இந்தத் தொழிலை மூர் ஜாதியார் மறந்திடாமல் அநுசரித்துக்கொண்டு வந்ததாய்க் காண்கிறது. 1115-ம் ஆண்டு மேஜார்கா தீவைப் பைஸர்[3] பிடித்துக்கொண்டபொழுது, அந்த மூர்ஜாதியாருக்குள் இத்தொழிற் பயிற்சி இருந்தது. சூறைசெய்து கொண்டுபோன பொருள்வகையிற் சில விதவிதமான மட்பாண்டங்களைப் பகைவர் தாம் பெற்ற ஜயத்தை என்றென்றைக்கும் சிந்தையில் நிறுத்தும் சின்னங்களாகப் பைஸாவில் உள்ள சிலபூர்வதேவாலய மதில்களுக்குள் வைத்துக்கட்டினார்கள். அவைகளை அம்மதில்களில் நாளதுவரையில் காணலாம். அதன்பின் இருநூறு வருஷம் சென்று இத்தாலியர் பளிங்கு ஒப்பத் துலங்கும் அவ்வகை மட்பாண்டம் செய்யத்தொடங்கி, மூர் ஜாதியார் அவ்வனைதொழில் செய்த ஸ்தானமாகிய மேஜார்கா தீவைக் குறிப்பிக்கும்படி தாம் வனைந்த பாண்டத்திற்கு 'மேஜாலிகா' எனப் பெயர் வழங்கினார்கள்.

### இத்தலிதேசத்தில் பீங்கான்வேலை செய்வகையைப் பின்னும் கண்டுபிடித்தவர்.

இத்தாலியாவில் பளிங்குமினுக்குள்ள மட்பாண்டம் வனையும் தொழிலை எல்லாரும் மறந்திட்டபின் மீளவும் கண்டறிந்து பயின்ற ப்ளாரென்ஸ் நகரத்துச் சித்திர ஓடாவியாகிய லியூக்கா டெல்லா ரப்பியா (Luca della Robbia) என்பவன் பகல் முப்பது நாழிகையும் கைக்கொண்ட சேதுக்குளி கைவிடாது உழைத்து, இரவில் வெகு நாழிகைநேரம் சித்திரம் எழுதிப் பழகிக்கொண்டுவந்த இளைப்பற்ற உற்பாதபிண்டம் என்று வஸாரி (Vasari) எழுதுகிறார். அவன் சித்திரம் எழுதும் வித்தையை மிகு பக்தி சிரத்தையோடு கற்றுக்கொண்டுவந்து ராத்திரி காலத்தில் நாழிகையேறச் சித்திரம் எழுதிக்கொண்டிருக்கும் பொழுது, பாதம் இரண்டும் கடுங்குளிரில் விறைக்காவண்ணம் ஒரு கூடையில் மரம் இழைத்த செதுக்கல் சேகரித்து அதில் பாதத்தை வைத்துச் சூடேற்றிக்கொண்டு தன் வேலையில் கண்ணாயிருப்பான். பின்னும் வஸாரி சொல்லியது :—"இதைத்தொட்டு எனக்கு இறையளவும் ஆச்சரியம் இல்லை. வெப்பம்-குளிர்-பசி-தாக முதலிய வாதைகளை இளமையிலேயே தாங்கி வழக்கப்பட்டிராதவன் எந்தத் தொழிலிலாவது தேறி நிபுணனென்று பெயரெடுக்கக்கூடாதே, நானுவிதபோகங்களும் குறைவற அநுபவித்துச் சுகித்திருந்து கொண்டு மேம்பாடு அடைவோமென்று வியர்த்தமாய் எண்ணுவோர் ஏமாறிப்போவார். எந்தத் துறையிலேனும் வரவரத் தேறித் தெளிந்து பிரக்கியாதராவோர் ஆரோக்கியமாய்ப் படுத்துத் தூங்குகிறவர்களல்ல, துயிலொழிந்து விழித்திருந்து எப்பொழுதும் ஓயாதுழைப்பவர்களே."

மேற்படி, லியூக்கா கருத்தாய் முயன்று கைத்தொழில் செய்தும், அவன் சிலையிற் சித்திரம்செய்து விற்றுத்தேறின பணம் குடும்ப சம்ரக்ஷணைக்குப் பற்றவில்லை. அப்படி இருந்தும் அவன் மனம் சலிக்கவில்லை. அவன் அதுவரையிற் சித்திரம்செதுக்கியது பாற்கல்லில். பாற்கல் மிக வைரமுள்ளது. விலை உயர்ந்தது. சற்று இளகி விலை எளிதாயுள்ள ஏதாயினும் ஒரு பொருளில் பிரதிமைகள் அச்சுகள் செய்து விற்றால் வருமானம் செலவிற்குக்

3. Pisans.

கட்டுமென்று அவன் சிந்தையிற் பட்டது. ஆனதுபற்றியே அவன் களிமண்ணில் உருச் செய்து அது நீடித்து உருதி குன்றாதிருக்கும்படி பூச்சிட்டுச் சுடும் வகை ஏதென்று கண்டுணரப் பரிசோதனை செய்துபார்த்தான். பலவாறு பரிசோதனை செய்தபின் பூச்சிடும் பதார்த்தம் இன்னதென்று அவனுக்குத் தெரிய வந்தது. அதைக் களிமண்ணிற் பூசிச் சூளையில் நன்றாக வேகவைக்க அது உரத்துப் பளிங்குபோல மினுங்கியது. பின்னிட்டு அதற்கு வர்ணம் தீரும் பக்குவத்தைக் கண்டறிந்தான். வர்ணம் தீரவே அது கண்ணுக்கு மிகவும் சிறப்பாகத் தோன்றிற்று.

லியூக்கா செய்த நாணயமான பாண்டங்களின் பிரதாபம் ஐரோப்பா எங்கும் எட்டி அப்பாண்டங்கள் வெகுதூரம் போய்ச்சேர்ந்தன. பிரான்சுக்கும் ஸ்பானியாவிற்கும் திரளாய் அனுப்பப்பட்டு அங்குள்ளவர்கள் அவைகளைப் பாராட்டி விலை ஏறக்கொடுத்து வாங்கினார்கள், அக்காலத்தில் பிரான்சிய குலாலர் வனைந்து விற்ற பாண்டவகை புகைநிறமான மட்டிச் சாடியும் வேறு சிறு மட்கலங்களுமே. பலிஸ்ஸி (Palissy) யின் காலமளவும் இருந்த சீர் சற்றேறக்குறைய இதே. அவன் தீராப் பெருஞ்சங்கடங்களைக் கண்டும் சிறிதேனும் இளைக்காமல் உழைத்து உழன்று ஒருவாறு அச்சங்கடங்களைத் தவிர்த்த சுத்தவீரன். ஆகவே, பலவித அரியகுண கிர்த்தியங்களாற் சிறந்த அவனுடைய வரலாறுகள் எல்லாம் அபூர்வமான கற்பிதகதைகளாகத் தோன்றும்.

பெர்னார்ட் பலிஸ்ஸியின் சரித்திர வரலாறு.

பெர்னார்ட் பலிஸ்ஸி (Bernard Palissy) பிறந்தது பிரான்சுதேசத்தின் தென்பாகத்து ‘ஏஜென்’ அத்தியக்ஷர் கோவிற்பற்றில் 1510-ம் வருஷமென்று உத்தேசம். அவர் தகப்பன் கண்ணாடிவேலை செய்தவர்போலும். ஆதியில் அவர் பயின்ற வேலையும் அதே. அவர் தாய் தந்தையர் சிறிது காலமாயினும் அவரைப் பள்ளிக்குவைத்து எழுத வாசிக்கப் பயிற்றுவிக்க நிர்வாகமின்றிக் கடையழிந்த ஏழைகள். “யாவரும் எளிதில் வாசிக்கும்படி திறந்து வைத்திருக்கின்ற வானமும் பூமியும் தவிர வேறு புஸ்தகம் எனக்குக் கிடையாது” என அவர் பிற்காலத்தில் சொன்னார். ஆனாலும், அவர் கண்ணாடிக்கு வர்ணம் தீரும் முறையை முயற்சியாய்க் கற்றிருந்து அப்பால் சித்திரம் எழுதப் பயின்று அதன்மேல் எழுத வாசிக்கப் பழகினார்.

அவருக்கு முன்பின் பதினெட்டுப் பருவம் ஆக, கண்ணாடிவியாபாரம் சளைத்துப்போனதுபற்றி அவர் தந்தையின் வீட்டை விட்டுப் புறப்பட்டு முதுகில் அடைப்பை சுமந்துகொண்டு உலகில் தமக்கு இருப்பிடம் எங்கே கிடைக்குமோ பார்க்கலாமென்று தேடித்திரியத் தலைப்பட்டார். ஆரம்பத்தில் அவர் காஸ்கனிக்கு நேர்முகமாய்ப்போய் வழியில் கண்ணாடிவேலை அகப்படும் இடங்களில் தங்கியிருந்து அதைச் செய்வதும் அப்போதப்போது சிறிது நேரம் நிலம் அளப்பதுமாய் இருந்தார். பின்பு அவர் வடக்கு முகமாய்ப் பிரயாணம்செய்து பிரான்சு, ப்லாண்டர்ஸ், ஜர்மனியின் தென்பாகம் ஆகிய இந்நாடுகளில் வெவ்வேறு இடங்களில் நெடுகக் குறுகத் தங்கிப்போனார்.

பலிஸ்ஸி மேற்சொல்லியவாறு ஏறத் தாழப் பத்துவருஷம் பிரயாணம் செய்து அதன்மேல் மணம் புரிந்து தேசாந்தரம் போவதை அம்மட்டில் நிறுத்திவிட்டு, கண்ணாடிக்கு வர்ணம் தீர்த்தும் நிலம் அளந்தும் பிழைக்க (Charente) சாரேந்தியின் தென் பாகத்தில் ஸேந்தீஸ் (Saintes) எனும் சிற்றூரில் நிலைக்குடியாயிருந்தார். அங்கிருக்கையில் அவருக்கு மக்கட்பேறு உண்டாய் சமுசாரக் கவலையும் செலவும் பெருகி எவ்வளவோ பாடுபட்டும் வரவு செலவிற்குக் கட்டவில்லை. பின்னும் அதிகமாய் மெய்வருந்தி உழைக்காமல் தீராதெனத் தோன்றிற்று. கண்ணாடிக்குச் சாயந் தீரும் வேலை பிழைக்க உதவுமென்று நம்பியிருக்க இடம் இல்லை. அவ்வேலையில் நாய்படாத பாடுபட்டு மெய்வருந்துவதைவிட்டு மற்றேதாயினும் நயம் பெற முயற்சிசெய்து பிழைக்கத் தம்மால் ஆகுமென்று அவர் நினைந்தார் போலும். ஆனதனாலேயே மட்பாண்டங்களுக்கு வர்ணம் பூசித்தளுக்கிடும் தொழிலில் அவர்கருத்துச் சென்றது. முன் பயின்ற தொழிற்கு இனமான தொழிலெனினும் இவ்வேலை அவருக்கு எள்ளத்தனையும் தெரியாது. மட்பாண்டம் வனைந்து சுட்டதை அதற்குமுன் அவர் ஒருபொழுதும் கண்டதில்லை. இப்பொழுது அவருக்குக் கைத்துணை எவரும் இல்லை. தாமாகவே இத்தொழில் முறையைக் கண்டறிந்து பயின்றாற் பயிலலாமே தவிர

வேறு வகை இல்லை. ஆனாலும் இதை அவர் நிர்வகிக்கத்தக்க உற்பாத பிண்டந்தான். அவருக்குத் தொழிலில் ஆசை நிறைந்து தொழில் பயிலும் அவா மிகுந்து கருமமுடிக்கும் துணிவு கரைகடந்து இறைக்க இறைக்க வற்றாத நீரூற்றுப்போலப் பொறுமை என்பது சுரந்தவண்ணமாயிருந்தது.

இத்தலிதேசத்துப் பீங்கான் பாத்திரம் ஒன்றைப் பார்க்க அவருக்கு ஆசை பொங்கியது.

ல்யூக்கா டேல்லா ரப்பியாவின் கைவேலையெனத் தோன்றும் இத்தாலியாவில் வனைந்த சிறந்த பாத்திரம் ஒன்றை அவர் ஒரு நாள் கண்டதனாலேயே இந்நூதனத் தொழிலில் அவருக்குச் சிந்தனை ஓடிற்று. நூதன்மாய் ஒரு சிறிய பாத்திரத்தைக் காண்பது அதிசயமல்லவே. சாமானிய புத்தியுள்ளவர்கள் கண்ணெதிரிற் காணும்பொழுதன்றி, கண்டபின் அதைக்குறித்து நினையார்களே. இரண்டொரு மாசம் முந்திக் காணச் சம்பவித்தால், பலிஸ்ஸி தாமும் அதை நினையார். அப்பொழுது அவர் அதைக்கூர்ந்து நினைத்துக் காலவிசேஷத்தால் நூதனமாய் ஏதாயினும் ஒரு தொழில் செய்து பிழைக்கவேண்டு மென்றிருக்கையில் அவர் அச்சிறு கலத்தைக் கண்டார். காணவும் அதைப்போலக் தாமும் செய்ய வேண்டுமெனும் ஆசை பஞ்சிற் பறக்கும் நெருப்புப் பொறிபோல, அவர் மனதிற் பற்றியெரிந்தது. அப்பாத்திரத்தைக் கண்டு அவர் மனம் நிலைகுலைந்து தடுமாறியது. அப்பாண்டத்திற்குப் பூசித் தளுக்கிட்ட திரவியத்தைக் கண்டறியும் *கடைப்பிடி, ஆசை எனும் பேய் போல் அன்றுதொட்டு அவர் நெஞ்சிற் குடிகொண்டது. அவர் பிரமசாரியாயிருந்தாரானால், அவ்வந்தரங்கத்தை தேடிக் கண்டறிய இத்தாலியா தேசத்திற்குப் பிரயாணப்படுவாரே: ஆனாலும், சமுசார சாகரத்தில் இறங்கித் தத்தளிக்கும் அவர் என்ன செய்வார். பெண்சாதி காற்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு. இந்தப் பந்தத்தை எளிதில் அறுத்து அவர் களைவிட்டுப் போகக்கூடாததுபற்றி, அவர் மனைவிமக்களை விட்டுப் பிரியாதிருந்து, மட்பாண்டம் செய்து தளுக்கிடும் வகையைக் கண்டறியும் ஆசை பெருகப் பெருக இருட்டில் கண் தெரியாதவர்போலத் தடவினர்.

(இன்னும் வரும்.)

* கடைப்பிடி=firm resolve,

## SOCIAL SERVICE:

"ENJOYMENTS OF THIS WORLD NOT REAL.'

## சமஷ்டி சாதனம்.

"லௌகிகப்பொருள்களால் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல."

இம்மையில் இடம், பொருள், ஏவல் முதலிய ஏதுக்களைக்கொண்டு அனுபவிக்கும் இன்பம் குறைவுள்ளது. இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. அவைகளை விவரமாய் எடுத்துச்சொல்லில் பெருகும். ஆதலால் அவற்றுள் விசேஷமாகத் தோன்றும் மூன்று திருஷ்டாந்தங்களை இவ்விடத்தில் சுருக்கித் தெரிவிப்போம். பூலோகத்தில் மனுஷர் சுகம் பெறக் கருதிச் சம்பாதிக்க முயலும் எவ்வகைச் செல்வமும் பொருட்செல்வம், புகழ்ச்செல்வம் என இருவகைப்படும். இவ்விருவிதச் செல்வங்களுக்கும் மூன்று நிலைமைகள் உண்டு. முதல், தேடும் நிலைமை. இரண்டு, அனுபவிக்கும் நிலைமை. மூன்று, காக்கும் நிலைமை. சிலர் தேடமுயலும் செல்வத்தைத் தாம் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுகிறார்கள். சிலர் அடைந்தும் அதை அனுபவிக்கும்பொழுது திர்ப்தியின்றி மனக்குறைப்படுகிறார்கள். சிலர் அடைந்தும் சிலகாலம் அனுபவித்தும், அதைச் சிதைவின்றிக் காக்கலாகுமென்ற திடநம்பிக்கையில்லாமையால் சந்தேகக்கடலில் மூழ்கி வருந்துகிறார்கள்.

இவ்வாறே இம்மூன்று நிலைமைகளிலும் துன்பம் சம்பந்தப்பட்டிருப்பதினால், லௌகிகப் பொருள்களால் ஆகும் இன்பம் பூரண இன்பமல்ல. தேடமுயலும் செல்வத்தைக் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுவதும், சர்வதேசத்தார்களும் தங்கள் தங்கள் குறைவு, நிறைவு, விருப்பு, வெறுப்புக்களுக்கு ஏற்க வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொள்ளுவதும் அவரவர் யுக்திக்கு உசிதமாகத் தோன்றும் பதறாத ஊக்கம், அஞ்சாத தீரம், தந்திர சாமர்த்திய முதலிய உபாயங்களால்

அந்த அபிப்பிராயங்களை நிறைவேற்றும்படி ஓபாமல் முயற்சிசெய்வதும் இயற்கையே. ஆயினும் பிரயோசனம் என்னை? தடையின்றி யாவரும் சித்தி அடைகிறார்களா? ஏது, எந்த முயற்சியிலாவது தவறாமல் அனுகூலம் பெறுவதற்கு ஏற்ற சாதனங்களை இதுவரையில் ஊகித்தறிந்தவர் எவருமில்லை. "வேகமுள்ளவர்களுக்குப் பந்தயமில்லை. பராக்கிரமசாலிகளுக்குச் செயமில்லை. புத்திமான்களுக்குச் செல்வமில்லை."

ஒருவன் எந்தக் கருமத்தையாயினும் செய்யும்வகை எதுவென்று அதிசூழ்ச்சியாகத் தேர்ந்து நிச்சயித்து, சிறிதும், இடையூறு வாராதபடிக் காப்பதற்கு மிகுந்த ஜாக்கிரதையாயிருந்தபோதிலும், அவன் புத்திக்கு எவ்வளவும், தோன்றாதவிக்கினம் எப்படியோ இடையில் சம்பவித்து, அவன் எடுத்துத் தொடுத்த கருமத்தைச் சிந்திக்காமல் தடுத்து, அவன் வருந்திச்செய்த முயற்சியை முழுமையும் வியர்த்தமாக்குவது மெய்யென்று சொல்லவேண்டியதில்லை. இது யாவருக்கும் அநுபவசித்தமாகத் தெரியுமே: இவ்வாறே தாம் விரும்பித்தேடும் விஷயங்களை அடையாமல் பிரதிகூலப்படுகிறார்கள். யார், அளவற்ற அதிகாரமும், செல்வாக்குமுடையவர் களாகும்படி அபேட்சிக்கும் அரசர் பிரபுக்கள் முதலான பெரியோர்கள் மாத்திரமா? அப்படியானால், மிகவும் சிலராகிய அவர்களுக்கு உண்டாகும் பிரதிகூலம், பிரவாகம்போலத் தேசத்தில் எங்கும் பரவியிருக்கின்ற சாதாரண ஜனங்களுக்கும் என்ன? தமக்குள்ள செல்வமும், செழிப்பும், அதிகாரமும், போதாதென்று சர்வதேசத்துச் செல்வப்பொருளையும், கைக்கொண்டு சர்வாதிகாரிகளாகும்படி கர்வித்தவர்கள் காரியசித்தி பெறாமல் தலைகீழாய் விழுந்தார்கள்: ஆனால் நமக்குச்சேதம் என்ன? என்று எண்ணிச் சாதாரண ஜனங்கள் விசாரமற்று இருப்பார்கள். ஆயினும் அனுபவத்தில் அப்படியல்லவே! அரசர், பிரஜைகள், பெரியோர், சிறியோர், கற்றோர், மற்றோர், செல்வர், வறியவர், நல்லோர், தீயோர் முதலிய வகுப்புவரையறையின்றி யாவருக்கும் அவரவர் முயற்சி பலிக்காமல் அப்போதப்போது பிரதிகூலம் நேரிடுகின்றது. இதைத் தவிர்க்கும்படியான திராணி ஒருவருக்குமில்லை. மிகுந்த விரைவாய் ஓடும் வெள்ளத்திற்கு எதிர்ப்பட்ட துரும்பானது அதற்கு எதிர்முகமாய்ச் செல்லாமல் அதனால் தள்ளப்பட்டு நேர்ந்த துறையில் அடைவதுபோல, மனுஷரும், உலகவாழ்வு என்னும் சமுத்திரப்பிரவாகத்தில் தாம் எடுத்த கருமத்தைக் கருதியபடி எப்பொழுதும் தவறாமல் முடிக்கத் திராணியற்றவர்களாய், காலவியற்கை காரணகாரிய சம்பந்த முதலிய தடுக்கப்படாத அலைகளின் வழிச் சென்று யாதேனும் ஒரு துறையில் சேர்வார்கள். இந்த நிர்ப்பந்தம் எவர்களுக்கும் சாதாரணமாய் இருக்கின்றது. சிலர் தாம் தேடிய பொருளை அடைந்தும் அதை அனுபவிக்கும் பொழுது திர்ப்தியின்றி மனக்குறைவுப்படுகிறார்கள்.

ஒருவன் இடைவிடாது முயன்று எவ்வகையான இடையூறுகள் சம்பவித்தாலும், அவைகளுக்குச் சிறிதும் அஞ்சித்தளர்ந்து பின்னிடாமல், அதிக ஜாக்கிரதையாயிருந்து தன் முயற்சியின் பயனை அடைகிறான். அடைந்தும் பிரயோசனமென்ன? அவனுக்கு ரம்மியம் உண்டாகிறதா! அவன் அபேட்சித்த பொருள் அகப்பட்டதென்று திர்ப்தியடைந்து ஆறித்தேறி, இனித்தனக்கு யாதும், குறைவில்லையென்று எண்ணிப் பூரண சந்தோஷமுள்ளவனாக இருக்கிறானா? இல்லை. எந்த ஸ்திதியிலிருப்பவர்களும், தாம் தேடும் பொருள் சித்திக்குமானால் தம்மைப்போல பாக்கியவான்கள் இல்லையென்று நினைப்பதும் அது சித்தியாகாத பொழுது, தாங்கள் நினைத்த அளவு இன்பத்தை அடையாதவர்களாய் மனக்குறைகொண்டு விசாரப்படுவதும் இயற்கைதான். கருமம் சிதறினாலும் துக்கம், சித்தித்தாலும் துக்கமே. கல்விப்பொருள் பிரதாப முடையவர்களாயிருக்கும் பெரியோர்

தமக்குப் பின்னும் பொருள் வேண்டுமென்று விரும்புவார்கள். செயலற்றுச் சோம்பி யிருப்பவர்கள் தமக்கு யாதேனும் ஒரு முயற்சி வேண்டுமென்று கருதுவார்கள்.

ஓயாமல் உழைக்கிறவர்கள் தங்குவதற்கு அரிய இளைப்புத்தமக்கு உண்டாகிறதாவென்று முறையிடுவார்கள். சாதாரண ஸ்திதியிலிருப்பவர்கள் அதிக தனமும் கனமும் பெறுவதற்கு வகை தேடுவார்கள். உயர்ந்த உத்தியோகங்கள் செய்து மிகுந்த வருமானம் பெறுகிறவர்கள் ஒருவருக்குள் அடங்கியிருந்து வருந்தாமல் சுயாதீனம் பெற்றுச் சுகிப்பது எத்தனை பாக்கியமென்று எண்ணி பெருமூச்சு விடுவார்கள். இப்படியே அவரவர் ஒன்றை விரும்பித்தேடி அடைந்து பின் அதனால் உண்டாகும், இன்பத்தைத் துன்பமாய்க்கொண்டு, மற்றொன்று பூரண இன்பம் பயக்குமென்று கருதித் தேடுவதும், தேடியபின் இவ்வாறே மனக்குறைப்படுவதும் வழக்கம். உள்ளத்தில் கண்ட ஒருகுறை நீங்க மற்றொரு குறை உண்டாகின்றது.

ஒரு விருப்பத்திற்கு இடங்கொடுக்க, ஒன்றின்பின் ஒன்றாய் ஒன்பதுகோடி விருப்பங்கள் உற்பத்தியாகும். விரும்பியவாறு அநுபவம் உண்டாகுமென்று அபேக்ஷித்தவரொழிய, உள்ளபடி அனுபவித்துத்திர்ப்தி யடைந்தவர் ஒருவருமில்லை. இம்மைக்குரிய விஷயங்களில் மனுஷருக்கு உண்டாகும் இன்பம் குறைதருதற்கு இரண்டு ஏதுக்கள் உண்டு. முதலாவது, அவ்வின்பத்தின் தன்மை, இரண்டாவது, அதைப் பழுதாக்குவிக்கும் சாதனங்கள். அழிவற்ற ஆத்மஜீவராகிய மனுஷரது அனுபவசக்திக்கு ஏற்க அவர்கள் நெஞ்சில் பிறக்கும் உந்நதமாகிய ஆசைகளுக்கு, லௌகிக விஷயங்களால் வரும் இன்பம் ஈடல்ல. வர்ணம் இட்ட சித்திரப் பிரதிமைபோல வசீகரசக்தியுள்ளதாகத் தூரத்தில் தோன்றும் இன்பப்பொருள் அனுபவத்தில் வரும்பொழுது அதன் அழகு குன்றி விகாரமாகி வெறுப்புத்தருகின்றது. ஒரு பொருளினிடத்து மனுஷருக்கு உண்டாகும் ஆவலானது அப்பொருளை அழகுள்ளதாகத் தோற்றுவிக்கும். நிழலைப் பொருளென்றும் நீர்க்குமிழியை நிலையென்றும் கொள்பவர்போல, மனுஷர் இந்த மாயத்தோற்றத்தை உள்ளதென்று எண்ணி தமது ஆவலின் வசத்தராகித் தம்மாலாகத் தக்க முயற்சிகள் அனைத்தையும் செய்து அந்தப்பொருளைத் தேடுவார்கள்.

அது கிட்டியவுடன், அவர்கள் ஆவலானது அந்தப் பொருளைவிட்டு, மற்றொன்றைத்தாவ, அவர்கள் தேடினபொருளை உபேட்சித்துப் பின்னும் ஆவலின் அடியைத் தொடருவார்கள். லக்ஷப்பிரபுவினிடத்தில் இருக்கின்ற திரவியமுழுதும் கிடைக்குமானால் எத்தனை பாக்கியமென்று ஆவலிக்கும் ஏழைக்கு அவன் விரும்பியவாறு திரளாகத் திரவியம் சேர்ந்தபின் சிலகாலமட்டும் அதை அநுபவிப்பார்கள். அப்புறம் பின்னும் அதிகம் வேண்டுமென்று விரும்பி மனக்குறைப்படுவார்கள். லௌகிகப்பொருள் இவ்வாறே மனுஷரை வஞ்சிக்குந் தன்மையுள்ளது. மேலும் குறைவற்ற செல்வமும் குன்றாதவாழ்வும். உடையார்களென்று பலரால் மெச்சப்படும் பெரியோர் தங்கள் செல்வத்தை அநுபவித்துச் சந்தோஷிக்கிறார்களா?

அவர்களுக்கு விசாரம் இல்லையென்று யார் சொல்லுவார்கள். பெரும்பாலும் சீமான்களே நிர்ப்பந்தப்படுகிறார்கள். ஏதாயினும் குறை அவர்களுக்கும் உண்டு. அதனால் அவர்களுக்குச் சஞ்சலம் தோன்றும். சஞ்சலமானது அவர்களுடைய மனவமைதியை வர வர அரிக்கின்ற சாவாத புழுப்போலவும், அவர்கள் ஆயுளை அன்றன்று சிதைத்துக் குறைகின்ற கூறியவாள்போலவும் இருக்கிறது. ஒருவனுக்குச் சஞ்சலம் இல்லாதிருப்பினும் "உலக இன்பம் உள்ளத்தைக் கெடுக்கின்றது.

துர்க்குணத்தை வளர்க்கின்றது. தேடி அனுபவிக்கும் இன்பத்தைக் காத்துக்கொள்வது, அதாவது ஒருவன் எவ்வாறுவது தான் விரும்பியபொருளைத் தேடினாலும், மேற்சொல்லிய கெடுதிகள் இன்றி அதை அனுபவித்தாலும், அதைக் காக்கும்வல்லமை அவனுக்கில்லை. உலகம், பொருள் ஒன்றாவது நிலையுள்ளதல்ல. விஷயங்களெல்லாம் தோன்றித் துலங்கி மங்கி மறைந்து போகின்றன. அவைகளை ஒரு நிலைமையில் காத்துக்கொள்வது சுபாவத்திற்கு விரோதம்.

செல்வம் வண்டியுருளையைப்போல மாறியும், யானையுண்ட விளாங்கனிபோலச் சிதைந்தும், பட்சியைப்போல பறந்தும், மின்னலைப்போல விரைவில் மறைந்தும், வெயில் முன் பனிபோலக் கரந்தும் போகின்றது. இத்தன்மையாகிய செல்வப் பொருளாலுண்டாகும் இன்பமும், அப்பொருள் போலமாறியும், மறைந்தும், கரந்தும் போவதால், அவ்வின்பத்தைக் காப்பதற்கு எவராலும் இசையாதே; ஒன்றைக் காக்குந் தொழில் என்ன சொற்பமா! ஒருவன் மிகுந்த திரவியம் வைத்து வியாபாரஞ்செய்து நெடுநாள் வரையில் சமைப்பித்து நிறைவேற்றும் அலங்கார மாளிகையானது சடுதியில் வீசும் சண்டமாருதம், விழும் இடி, சத்துருக்கள் முதலிய இடையூறுகளால் நொடிக்குள்ளே இடிந்து பொடியாய்த் தரைமட்டமாவது போலவே இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எந்த இன்பமும், எண்ணிறந்த இடையூறுகளுக்கு ஏதுவாயிருப்பதினால் அதைச் சிதைவின்றிக் காப்பது முழுமையும் அசாத்தியமாம்.

"ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவ ரளகேசனிகராக
வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்க லைந்திடுவர்
நெடுநா ளிலிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா னானெனக்குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக்கட் டற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண னந்தமே"—தாயுமானவர்.

## MUMUKSHUTARAKA, OR, 'THE WAY TO SALVATION.'

By

BHAGAVADH PADHA SRI SANKARACHARIA.

பகவத்பாத ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் உபதேசித்தருளிய

## முமுக்ஷுதாரகம் அல்லது "பஜகோவிந்தம்"

என்னும்

ஸ்ரீ கோவிந்தமஞ்சரிகா ஸ்தோத்திரம்.

(மார்கழிமீ சஞ்சிகையின் 279-ம் பக்கத்தொடர்ச்சி.)

பின்பு பொருளாசையையும் பெண்ணாசையையும் ஒழித்தற்கான மார்க்கம் போதிக்கப்பட்டது. மனைவி மக்கள் முதலான சுற்றங்களிடத்தில் வைத்த காதலை எவ்வாறு நீக்கிக் கொள்ளுவதென்னில் அதற்கு மார்க்கமும் ஒன்பதாவது செய்யுளில் கூறுகின்றார். அதுவும் அவர்களுக்கும் உனக்குமுள்ள உண்மையான சம்பந்தத்தைப் பகுத்து நோக்கி துணியின் நீங்குமென்கிறார். இச்சுற்றத்தார் எல்லாம் நமக்கு இப்பொழுது இவ்வுடலின் கண்ணே இடையில் தோன்றிய சம்பந்திகளேயன்றி அநாதியாயுள்ள ஆன்மாவுக்கு எவ்வளவும் சம்பந்தபடமாட்டார்கள் என்றும், இடையில் தோன்றியவாறே பிரிந்துபோவார்களென்றும் ஊகித்தறிந்து அவர்கள் பொருட்டுச் சஞ்சலமடைந்து வருந்துதல் அறிவீனமென்றுணர வேண்டுமென்று கூறுகின்றனர். எப்படியென்னில்—

9. "மனையாளெவணின் மகர்தாமெவர்காண்
நினைநல்குமுனம்மெவணின்றனைநீ
புனைவாழ்விதுதான் புதுமைத்ததுவால்
இனியுண்மையறிந் தெறிவாய்மயலே."

அதாவது, இப்போது உனக்கு மனைவியாக வாய்த்திருப்பவள் அதற்கு முன் யாவளாயிருந்தனள்? உனக்குப் புத்திரராயுற்பவித் திருப்பவர் உன் வயிற்றிற் பிறப்பதற்கு முன் யாவராயிருந்தனர்? உன்னை உன் மாதா பிதாக்கள் புத்திரனாகப்பெறுவதற்குமுன் நீதான் எங்கி

ருந்தாய்? இவற்றையெல்லாம் உட்புகுந்து ஆலோசிக்கின் இப்பிரபஞ்ச வாழ்க்கையானது அதி விசித்திரமாகத் தோன்றும். ஆதலின், இனியேனும் வேதாந்த விசாரணைசெய்து உண்மையை யுணர்ந்து அம்மனைவிமக்கள் முதலான சம்சாரத்தில் வைத்துள்ள பிராந்தியை ஒழிப்பாயாக. என்றபடி.

பின்பு இவ்வாசாபாசங்கள் எல்லாம் ஒருங்கே நீங்கி முத்தியடைதற்கு மார்க்கம் சத்ஜன சங்கமே யென்று பத்தாவது செய்யுளில் கூறுகின்றார். எப்படியென்னில்,

10. "மேலோருறவாலறும் வேறுறவே
மாலேயறுமவ்வுறவின்மையினல்
தோலாவுணர்வாமயல் சோர்கையினல்
மேலாமுணர்வால் வரும்வீடதுவே."

அதாவது, வேதாந்த சிரவண மனனாதிகளாலே பரிசுத்தமடைந்த உள்ளத்தையுடைய மகாத்துமாக்களின் சகவாசத்தைப் பெறுதலினாலே மற்றப் புத்திர மித்திரகளத்திராதிகளில் வைத்த பற்று நீங்கும். அப்பற்று நீங்கலாலே தனாதிகளில் வைத்த மோகம் நீங்கும். அவ்வாறு தனாதிகளில் வைத்த மோகம் நீங்குதலாலே நிச்சலமான நிர்மலஞானமுண்டாகும். அந்த நிர்மலஞானத்தைப் பெறுதலினாலே ஜீவன் முத்தியுண்டாகும் என்றபடி.

இவ்வாறு சத்சகவாசம்பண்ணி மெய்யுணர்வைச் சாதித்துக்கொள்ளின், கயிற்றிற் றோன்றிய அரவம்போலவும், கானலிற்றோன்றிய ஜலம்போலவும், அறிவின்கட்டோன்றிய இந்தப் பிரபஞ்ச மயக்கம் தீருமென்பதை 11-வது செய்யுளில் வற்புறுத்துகின்றனர். இளமையுள்ளமட்டுமே காமவிகாரமும், நீருள்ள மட்டுமே மடுவும், கைப்பொருளுள்ளமட்டுமே சுற்றத்தார் முதலானபரிவாரங்களும் உள்ளவாய் அவை போனபின் எவ்வாறு நீங்கிவிடுகின்றனவோ அவ்வாறே அஞ்ஞான முள்ளமட்டுமே அதன் காரியமாகிய பிரபஞ்ச முன்னின்று ஞானமுதித்தவுடனே பிரபஞ்சமயக்கம் தீர்ந்து முத்தி யுண்டாகும் என்று போதிக்கின்றனர். எப்படியென்னில்,—

11. கடிகாமமெனுமிளமைக்கழிவில்
மடுவேதுளதாம்புனல்வற்றியகால்
உடனார்பவர்கைப்பொருளோயிலொனெவண்
நெடுமெய்யுணர்நெஞ் சுறினெங்குலகே.

அதாவது, இளமைப்பருவம் நீங்கிய பின்பு காமவிகாரங்கள் ஒருவரைப் பாதிக்கவல்லவாமோ? தண்ணீர் வற்றிப் போனபின்பு தடாகமென்பதுண்டாகுமோ? உருவழிந்து போகுமன்றோ? கைப்பொருளிழந்து வறுமையடைந்த காலத்தில் புத்திர மித்திரகளத்திரதாசீ தாசாதி பரிசனங்கள் உன்னைத் தொடர்ந்து நிற்பார்களா? நிற்கமாட்டார்களன்றோ? அதுபோலவே பரமாத்ம பரிஜ்ஞானமானது ஒருவர்க்குச் சற்குருபதேசத்தாலே உண்டான காலத்தில் அகங்காராதிப் பிரபஞ்சங்கள் நிலைநிற்குமோ? முத்தனாதலினாலே சம்சாரநாசமுண்டாகும்—என்றபடி.

இவ்வாறு இவ்வான்மஞானத்தைச் சிறப்பித்துப் பின்னர் அதனாலடையக்கூடிய ஆன்மானந்தத்தின் பெருமையை உணர்த்துகின்றார். இளமையும் செல்வமும் பந்துவர்க்கங்களும் நிலையில்லாமல் மின்னலைப் போலத் தோன்றி யழிந்து போவன. ஆன்மானந்தமோ அழிவில்லாமல் நித்தியமாயிருப்பது ஆதலின் இப்படி அநித்தியமாய் அழிந்து போகக்கூடிய பேறுகளைப் பெற்றுள்ளோமென்று அவிவேகத்தினால் அகங்கரியாமல் நித்தியமாய் அசஞ்சலமாயுள்ள மோக்ஷானந்தத்தை மெய்யறிவினாலே பெற்றுக்கொள்கவென்று அடுத்த செய்யுளில் போதிக்கின்றார். அது எப்படியென்னில்,—

12. திருவாலுறவாலெழிலான் மகிழேல்
வருகாலமயின் றிடும்யாவையுமே
உருமாயையினுமுலகிதொருவா
அருமாபதமேயறிவாலுறவே.

அதாவது, செல்வத்தாலாயினும், புத்திரமித்திரகளத்திராதி பரிவாரஜனங்களாலாயினும், இளமையினாலாயினும் கர்வமடையாதே. அவை யொன்றேனும் நிலையுள்ளனவல்ல. அவையனைத்தையும் காலமானது விழுங்கி

விடும். அதாவது காலவசத்தாலே அனைத்தும் அழிந்துபோகும். ஆதலால் மாயாகாரியமாகிய இந்தப் பிரபஞ்சத்தை விவேகத்தினால் தெரிந்து நீக்கிச் சர்வ வியாபகமாகிய பரமாத்மஸ்வரூபத்தை விசாரத்தினாலே யுணர்ந்து மோட்சானந்தத்தை யடைவாயாக.—என்றபடி.

கடைசியாக, ஆயுளானது வரவரக் குறுகின்றது. ஆசையானது நம்மை ஒருநாளும் அதற்கிணங்கும்வரையில் விடுவதில்லை. ஆதலின் இந்தச் சின்னாட் பல பிணிக்கிடனாகிய சிறு வாழ்வை வீணேபோக்கிக்கொள்ளாமல் ஆசைவேரகழ்ந்து பகவத் பத்திபண்ணி மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்கவென்று கூறுகின்றனர். அதெப்படியென்னில்,—

13. "பகலாயிரவாய்ப் பனியாய்வெயிலாய்
வகையாவருமால் விளையாடிடல்போல்
நகுபோழ்ததுதான மதாயுள்செலும்
அகலாதொரவா வெனுமாசுகமே."

அதாவது, காலமானது பகலென்றும் இரவென்றும் பனியென்றும் வெயிலென்றும் பல பிரகாரமாகக் குழந்தைகள் விநோதமாக ராஜா மந்திரி முதலான வெறும் பெயர்களை வைத்துக்கொண்டு விளையாடுதல் போல மாறிமாறி வந்து விளையாடுகின்றது. ஆயுள் நாளுக்கு நாள் செல்லுகின்றது. மேலேசொல்லிய கால ஸ்வரூபங்களைச் செவ்வையாக ஆராய்ந்து தெரிந்துகொண்டபோதிலும் காற்றைப்போல ஸ்வரூபமில்லாமல் எங்கும் வியாபிக்கும் துராசையானது மனிதர்களைவிட்டு ஒருநாளும் நீங்காது என்றபடி,

ஆதலால், கோவிந்த நாமத்தையே பஜித்துக் கரையேறுவாய்:

"பஜகோவிந்தம், பஜகோவிந்தம்,
பஜகோவிந்தம் மூடமதே"
கோவிந்தனையே குறியாய் குறியாய்
கோவிந்தனையே குணனின் மதியாய் !

* * *

என்று ஸ்ரீமத் ஸங்கராசாரிய ஸ்வாமிகள் கருணை மிகுதியால் உய்யும்வழி உபதேசித்தருளினர்.

## ON THE GEOGRAPHICAL DISTRIBUTION OF ANIMALS.

## உலகத்தில் ஜீவஜெந்துக்கள் பரவி இருக்கும் வகை.

"உலகத்தில் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு விதமான ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உதாரணமாக இந்துதேசத்தில் புலி, யானை முதலிய மிருகங்கள் இருக்கின்றன. இங்கிலாந்து சீமையில் அவைகள் இல்லவேயில்லை. ஆப்பிரிக்காகண்டத்தில், தீக்குருவியும், நீர்க்குதிரையும் இருக்கின்றன. அவை நமதுதேசத்திலில்லை. இதற்கு ஏதாவது காரணமுண்டா வென்பதையும் உலகத்தினது கண்டங்களுள் எவ்விதமாய் ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பதையும் சற்று யோசித்துப் பார்ப்போம்.

எல்லா தேசங்களிலும் ஏதாவது சில விதமான ஜெந்துக்கள் இருக்கின்றன. வருஷத்தில் ஒன்பது மாதம் பனிக்கட்டிகளால் மூடப்பட்ட குளிர்ந்த தேசங்களாகிய துருவத்திற்கடுத்த சீமைகளிற்கூட உயிருள்ள ஜெந்துக்கள் உண்டு. உயிர் வாழும் ஜெந்துக்களில் முக்கியமான சிலவற்றைப் பார்த்தால், அவைகளிற் சில உலகத்தில் பற்பல இடங்களில் பரவியிருக்கின்றன. மற்றுஞ் சிலவோ சில விடங்களில்தான் பரவியிருக்கின்றன. உதாரணமாக, மனிதன் சற்றேறக்குறைய உலக முழுமையும் பரவியிருக்கிறான். எலியும் அப்படிதான். புலி இவ்விரண்டு ஜெந்துக்களைப் போலவ்வளவு அதிகமா யில்லாவிடினும், இந்தியா, பர்மா, மலேயா, சீனா முதலிய தேசங்களிலிருக்கிறது. சில மீன்கள் ஒரே ஒரு நதி அல்லது ஏரியில்தானிருக்கின்றன.

பெரும்பாலும், ஒரே ஜாதி ஜெந்து தொடர்ச்சியா யிருக்கும் தேசங்களில்தான் பரவியிருக்குமே யல்லாது, வெவ்வேறு மூலைகளிலிருக்காது. ஆனால் இந்த விதிக்கு விலக்கான மிருகங்கள் சில உண்டு. இவைகளுள் முக்

கியமானது 'டேபிர்' (Tapir) என்றது. இது யானையைப்போன்ற ஓர் மிருகம். இது மலேயாவிலும் தென் அமெரிக்காவில் சில பாகங்களிலும் இருக்கின்றது. இடையே எங்கேயுமில்லாமல் இவ்வளவு தூரதேசங்களில் இது இருப்பதற்கு என்ன காரணம்?

அங்கங்கே இந்த மிருகங்கள் கடவுளால் முதலில் சிருஷ்டிக்கப்பட்டன வென்றும், இவைகளுக்கு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை யென்றும், சிலர் சொல்வார்கள். ஆனால் அது தப்பு. இவ்வுலகம்; மனிதன் முதலில் உண்டானதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே இருந்துகொண்டிருக்கிறது. மற்ற ஜெந்துக்களைக்குறித்து யோசிக்குங்கால் மனிதன் நேற்று வந்தவன் இந்த 'டேபிர்' என்னும் மிருகம் உலக முழுதும் வெகுகாலத்துக்கு முன் பரவியிருந்தது என்பதற்குவேண்டிய சாக்ஷியமிருக்கிறது. தராசத்துக்களை வெட்டியெடுத்தால் அவைகளுக்குள் இதனுடைய எலும்புகள் அகப்படுகின்றன.

மிருகங்களும் ஜெந்துக்களும் அவையவைகள் தங்கள் வாசஸ்தலமாகிய குறிப்பிட்ட சில தேசங்களில் மாத்திரம் இருப்பானேன்? உதாரணமாய் புலி இங்கிலாந்து சீமையில் ஏன் இருக்கக்கூடாது? இதற்கு பொதுவாய் காரணம், எந்த தேசத்து சீதோஷ்ணஸ்திதி எந்த ஜெந்துவுக்கு பிடித்திருக்கிறதோ அந்த தேசத்தில்தான் அது வளரும் என்று சொல்வார்கள். இது அநேகமாய் சரிதான். ஆனால் புலி சீன தேசத்தில் ஏராளமாய் இருப்பானேன். ஏறக்குறைய அதே (Latitude) ரேகையிலிருக்கும் இங்கிலாந்தி லில்லாதிருப்பானேன். அதற்கு மற்றொரு காரணமுமுண்டு. மிருகங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு பரவாமலிருப்பதற்கு மலை, பாலைவனம், கடல் முதலிய தடைகளுண்டு. இக்காரணத்தால் தான் இந்தியாவில் புலி இருக்க, அருகாமையிலிருக்கும் இலங்கைத்தீவில் அது சுத்தமாயில்லை. இதே காரணத்தால்தான் ஆப்பிரிக்காவில் ஸஹாரா பாலைவனத்துக்கு தெற்கேயிருக்கும் மிருகஜாதிகளுக்கும், வடக்கேயிருப்பவைகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. சில ஜெந்துக்கள் எப்பேர்க்கொத்த தடைகளையும் தாண்டி பரவும் சக்தியுள்ளவைகளா யிருக்கின்றன. உதாரணமாய் மனிதன்மலை கடல் முதலியவைகளையெல்லாம் தாண்டும் சக்தியுடையவன். பறவைகளுமப்படியே. அநேக மிருகங்களுக்கு சமுத்திரத்தைக்கடக்க சக்தியில்லை. தவளைக்கு கடல்நீர் பொறுக்காது. ஆதலால் தான் அநேகம் தீபாந்தரங்களில் தவளையேயில்லை. தவிர மனிதனைப்போல மிருகங்கள் முதலான இதர ஜெந்துக்களுக்கு அந்தந்த தேசத்து சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்தபடி உடைகளைத் தரித்துக்கொள்ளவும் அதிக உஷ்ணத்தையும் அதிக சீதளத்தையும் தாங்கவும் திறமையில்லை.

தீவுகளைக்குறித்துப் பேசுங்கால், அவைகளைக் குறித்து சில சமாசாரம் இங்கே சொல்வோம். உலகத்திலுள்ள தீவுகளையெல்லாம் பொதுவாய் இரண்டு பெரிய பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவையாவன, இயற்கையாயுண்டான தீபாந்தரங்களும் பூகம்பம் முதலிய காரணங்களால் மற்ற பூமியிலிருந்து பிரிக்கப்பட்டு தீவானவைகளுமாம். இவைகளைக் கடற்றீவுகள் (Oceanic islands) என்று சொல்லலாம். முதல்வகுப்புக்கு உதாரணமாய், லக்ஷத்தீவுகள், அந்தமான், நிகோபார் தீவுகளை யெடுத்துக் கொள்ளலாம். இவைகள் எண்ணிறந்த சிறு பூச்சிகளாகிய பவழப் பூச்சிகளால் அநேககோடி வருஷங்களாய் உண்டாக்கப்பட்டன. இன்னும் பவழப்பூச்சிகள் திடல்களுண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டாவது வகுப்புக்கு உதாரணமாய் லங்கைத்தீவு, பிரித்தானியா தீவு முதலியவைகளை எடுத்துக்கொள்ளலாம். இவை ஒரு காலத்தில் மற்ற பூமியோடு சேர்ந்திருந்தவை. பூகம்பம் முதலிய காரணங்களால் அதினின்றும் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால்தான் இந்த இரண்டாவது வகுப்புத் தீவுகளில் பெரிய மிருகங்கள் இருக்கின்றன. முதல் வகுப்புத் தீவுகளில் அவையில்லை. மேற்சொன்னவைகளில் சிங்கம், புலி, கரடி முதலிய பெரிய மிருகங்களில்லவேயில்லை. தவளையுமில்லை. அது ஏனெனில் அவை மற்ற பூமிக்கு வெகு காலத்துக்குப்பின் உண்டானவை. ஆகையால் பெரியமிருகங்கள் தாமாய் அவ்விடங்களிலுண்டாவதற்கு வேண்டிய காலமின்னு மாகவில்லை. அம்மிருகங்கள் மற்ற இடங்களிலிருந்து வருவதற்கு நடுவே சமுத்திரமிருக்கிறது.

## SELECTION: AGAINST DRINK.

## கள்ளுண்ணுமை.

### கம்பராமாயணம்.

### கிஷ்கிந்தா காண்டம்—கிஷ்கிந்தைப் படலம் (90—95)

ஏயின விதுவலான் மற்றேழைமைப் பாலதென்னே
தாயிவண் மனைவி யென்னும் தெளிவன் றேற்றரும மென்னும்
தீவினையைந்தி னொன்றமன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின மயங்குகின்ற மயக்கின் மேன் மயக்குவைத்தாம்.

(கருத்து) கள்ளைக் குடிப்பதினுல் தாயிவள் மனைவி இவள் என்று புத்தி தெரியாதிருக்குமானுல் வேறு என்ன தருமம் இருக்கிறது ? பஞ்சமா பாதகங்களில் ஒன்று இந்தக்கள்குடி. ஏற்கனவே மாயாசம்பந்தத்தால் மயங்குகின்றோம். இதையுமறியாது பின்னும் கள்ளைக்குடித்து மயக்கத்தின்மேல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டோம்.

தெளிந்து தீவினையைச் செற்றோர் பிறவியைத் தீர்வரென்ன
விளிந்திலா வுணர்வினோரும் வேதமும் விளம்பவேயும்
நெளிந்துறை புழுவைநீக்கி நறவுண்டு நிறைகின்றேனுல்
அளிந்தகத்தெரிந் தீயை நெய்யிலைவிக்கின்றாரின்.

(கருத்து) இது நல்லது இது கெட்டது என்று அறிந்து கெட்டவினைகளை வெறுத்து நீக்குபவர் இப் பிறவித் துன்பத்திலிருந்து நீங்குவார்கள் என்று மேன்மைதங்கிய அறிஞரும் வேதமும் சொல்வதாயிருக்க இதை அறியாது நெளிந்துகொண்டிருக்கிற புழுவை நீக்கிவிட்டு கள்ளைக்குடித்து நிறைந்திருக்கிறேன். இது உள்ளே எரியும்படியான தீயை நெய்யைவிட்டு அவிக்க முயல்வதை ஒக்கும்.

தன்னைத்தானுணரத் தீருந்தகையது பிறவியென்ப
தென்னத்தான் மறையுமற்ற துறைகளுமிசைத்த வெல்லம்
முன்னைத்தான் றன்னையோரா முழுப்பிணி யழுக்கின்மேலே
பின்னைத்தான் பெறுவதம்மா நறவுண்டு திகைக்கும் பித்தோ.

(கருத்து) ஒருவன் தன்னைத்தானே உணர்வானுயின் துன்பமுள்ள பிறவியானது நீங்கும் என்று வேதமும் சாஸ்திரங்களும் சொல்லும் தன்னைத்தானே யறியாது மாயா சம்பந்தத்தில் அகப்பட்டுப் பின்னும் கள் குடித்துத் திகைப்பது பைத்தியகாரத்தனமேயன்றி வேறல்ல.

அளித்தவர் அஞ்ச நெஞ்சின் அடைந்தவர் அறிவு மூழ்கிக்
குளித்தவர் இன்பதுன்பங் குடைந்தவர் குடைந்த வேரி
ஒளித்தவர் உண்டு மீண்டிவ்வுலகெலா முணர வோடிக்
களித்தவரெய்தி நின்றகதியொன்று கண்டதுண்டோ ?

(கருத்து) கள்ளை வார்த்தவர்கூட மிகவும் பயப்படும்படி குடித்தவர் அறிவுகெட்டுத் துன்பத்தை யடைந்து உலகமெல்லாம் அறியும்படி அங்கு மிங்கும் ஓடிக் களிப்படைவதல்லாமல் அவர்கள் அடையும்படியான வேறு நல்லகதி ஒன்று உண்டோ?

செற்றதும் பகைஞர் நட்டார் செய்த பேருதவிதானும்
கற்றதுங் கண்கூடாகக் கண்டதுங் கலைவலாளர்
சொற்றதுமானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றது முணராராயின் இறுதி வேறிதனின் உண்டோ ?

(கருத்து) அதன் கெடுதியைக் குறித்துத்தான் கற்றதும் தன் கண்ணுல் அக்கெடுதிகளைப் பார்வையிட்டதும் சாஸ்திர பண்டிதர்கள் சொன்னதும் மானம் வந்து தொடர்ந்ததும் அதிக துன்பம் நேர்ந்ததும் ஆகிய இவைகளை ஆராய்ந்தறியாவிட்டால் இதைவிட வேறு என்ன முடிவு இருக்கிறது ?

வஞ்சமுங் களவு பொய்யும் மயக்கமும் மாயில் கொட்பும்
தஞ்ச மென்றாரை நீக்குந்தன்மையுங் களிப்புந்தாக்கும்
கஞ்ச மெல்லணங்குந் தீருங்கள்ளினுல் அருந்தினுரை
நஞ்சமும் கொல்வதல்லால் நரகினை நல்காதன்றே.

(கருத்து) வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் சரணமடைந்தவரை நீக்கும் தன்மையும் கள்ளருந் தினவர்களிடத்தில் உண்டாகும். இலட்சுமி கடாட்சமும் நீங்கும். விஷமும் ஒருவனைக் கொல்லுமே யொழிய நரகத்திற் சேர்க்காது. கள் என்றாலோ நரகத்தையும் அடைவிக்கும்.

ஐயா நான் கள் உண்பதால் இவ்வளவு கெடுதலிருக்கிறதென்று அறிந்துகொண்டேன். இனி மனதினுலும் நினைக்கமாட்டே னென்று சுக்ரீவன் சொன்னுன்.

## CHILDREN'S PAGE.

### WORLDLY LIFE, AN OCEAN FULL OF SORROW.

### சிறுவர்க்கான பக்கம்:

"ஸம்ஸாரம் ஸாகரம் துக்கம்."

மரங்கள் நெருங்கி அடர்ந்து கரேலென்று காரிருளொப்ப இருண்டிருந்த ஒரு பெரிய அடவியில் ஒரு ஏழை மனிதன் கந்தல் துணியும், சோர்ந்தமுகமுமாய் பசியால் தள்ளாடி வரும் நடையுடன் கூடி சென்றுகொண்டிருந்தான். காற்றோ விரைக்க விரைக்க மிகு பலமாய் வீசியடித்தது. இக்கொடூரங்கள் போதாதென்று அவ்வேழை மனிதனுக்கு பசியும் அனல்போலெழுந்தது. காட்டுமிருகங்களோ அகோர சப்தத்துடன் ஊளையிட்டன. என்செய்கிற்பான்? அவ்வேழை மனிதன்? அப்போது தனக்குள் தானே புலம்புகிறான். என்னெனில் "ஓ! சர்வஜீவதயாபரக்கடவுளே! யான் இங்ஙனம் வருந்துவதும் நீதியாமோ உன்சித்தத்திற்கு? கல்லைப்பெண்ணாக மாற்றிய நினக்கு கருணையுமிலதோ" "ஆதிமூலமேயென்ற யானையை ரக்ஷித்த சோதிபரம்பொருளே எனக்கருளே! யான் என் செய்வேன்! காசிவிஸ்வேசா இதுவும் உன்னருளோ! உன்னைச் சொல்லக் குற்றமென்ன? "ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே" யென்றபடி என் கஷ்டதசையை யான் அனுபவிக்கப்பிறந்ததும், யீான் படாதபாடும்பட்டு எல்லாவற்றையுமிழந்து திண்டாடித் தவித்து இங்ஙனம் செல்ல வைத்ததும் நினது திருவிளையாடலன்றோ?" என்று தாபந்திரியப்பட்டுத் தயங்கினவனாய் செல்ல அங்கே ஓர் பெரும் புலியானது சர, சரவெனப் புதரினின்றும் வெளிக்கிளம்பி இவனைத் துரத்த ஆரம்பித்தது. இவன் அதைக்கண்டு உளறியடித்துக்கொண்டு தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள, அருகிவிருந்த மாத்திலேறி தொத்தி மேலே செல்ல, அங்கே யொரு பாம்பு இவன் காலைச்சுற்றிக் கொண்டது. இக்கஸ்திதியில் அவன் ஏறிய கிளையும் ஒடிந்து விழுகிறாற்போல விருக்கிறது. "என்ன செய்வேன் சர்வேசா! ஒரு வழியும் தோற்றவில்லையே" எனக் கண்களில் நீர் சொரிய, மேலே அண்ணாந்து நோக்கினான் அவிடம் உள்ளதேன் கூட்டிலுள்ள ஈக்கள் இவனைக் கொத்திப்பிடுங்க, இரண்டு மூன்று தேன் துளிகள் சொட்சொட்டென்று இவன் வாயில்விழுந்தது. அதை இந்தப்பேதைமனிதன் வெகு ருசியாய்ச் சப்பிக்கொண்டிருக்கையில், காற்றும் பிரசண்டமாருதம்போல் வீசத்தலைப்பட்டது. சூரியனும் மறைந்தனன், மரக்கிளையும் படாரென முறிந்தது. பாம்பும் ஈக்களும் பறந்தோடின. புலி வாயிலடித்துக் கொண்டு சென்றது, கடைசியில் அம்மனிதனுடைய துக்கமெல்லாம் ஒரே தூக்கமாக முடிந்தது.

ஆ என் சகோதரர்களே! இப்படியேதான் இருக்கிறது இவ்வுலகமும். இக்கதையின் சாராம்சம் என்னவென ஆராய்வோம்? அப்புலி தான் நமது காலத்தைக்கணக்கிட்டு தீர்ந்தவுடன் கொண்டு செல்லும் "காலதூதன்" என்பது. அப்பாம்பு எப்படி அம்மனிதன் காலைச்சுற்றியதோ அது போலவே கர்மவினையினாலுண்டான சம்சாரம் நம்மைப் பீடிக்கிறது.

"தந்தைதாய் தமர்தார மகவெனுமிவையெலாம்
சந்தையிற் கூட்டமதிலோ"

என்றபடி சந்தையிற் கூட்டமாகிய சம்சாரம் அந்தப் பாம்பையொத்ததே. அவ்வடர்ந்த காடுதான் மாயையாகும் இவ்வுலகம். சுற்றியுள்ள ஈக்களோ பிடுங்கித்தின்னும் பந்துமித்திரர்களாவர். மரமோ இவனிருக்கும் நிலைமையாகும். அத்தேன்துளிதான் இவன் அனுபவிக்கும் சிற்றின்பமெனப்பட்ட நிலையற்ற இன்பமாம். இத்தனை ஆபத்துள் திண்டாடி அபேக்ஷிக்கும் அந்நிலையற்ற அச்சிற்றின்பத்திற்கு ஆசைப்படுவதால் வரும் வினைகளைக் கண்டீர்களா?

"தூங்கையிலே வாங்குகிற மூச்சு-அது
தூங்கிவாங்கையிலே சுழிமாறிப் போனாலும் போச்சு
பாங்கான திருநாளுண்டாச்சு
இங்கேபல பேர்கூடியயே கதைபேசலாச்சு"

என்றபடி இன்றோ, நாளையோ, அல்லது என்றோ வாழ்நாள்முடியும், இச்சின்னாட்களுக்குள் அற்ப இன்பத்தைக் கருதாது பத்திமேற்கொண்டு "நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்" உள்ள பெறற்கரிய சாயுஜ்ஜியத்தையடையுமாறு "புத்தியாலறி யொண்ணாப் புராணனைப்பத்தியாம் வலையிற்படுத்து" பேரின்ப சச்சிதானந்த நிமல ஊற்றில் நீந்தி விளையாட நாமனைவோரும் முயற்சித்து சென்றடையவழி தேடுவதே நம்முடைய கடமையாகும். சுபம்.

"அன்பே யென்னரசே திருவம்பலத்தாரமுதே
யென்பே யுள்ளுருகக்கலந் தென்னுளிருந்தவனே
யின்பே யென்னறிவே பரமே சிவமே யெனவே
யுன் பேரோதுகின்றே னெனக்குண்மையுரைத்
தருளே."